வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P . 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ஁ළනාඩු

Email : eelanaduweekly@gmail.com மலர் : 05 15.10.2024 செவ்வாய்க்கிழமை இதழ் : 288 பக்கங்கள் : 12




## இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் நிர்வாகத்துக்கு தடை கோரி மனு!

### கட்சி உறுப்பினர் நீதிமன்றத்தை நாடினார்

- பு.கஜிந்தன் -

யாழ்ப்பாணம், ஒக்ரோபர் 15

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவர், பதில் செயலாளர், நிர்வாகச் செயலாளர் ஆகியோர் அந்த பதவியை வகிக்க இடைக்காலத் தடை விதிக்கவேண்டும், 2024 ஜனவரி மாதத்தின் பின்னர் கட்சியின் மத்திய குழுவின் தீர்மானங்களை சட்டவலுவற்றதாக்க வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை முன்வைத்து, யாழ்ப்பாண நீதிமன்றில் தமிழரசுக் கட்சியின் ஆயுட்கால உறுப்பினரான மார்க் கண்டு நடராசா வழக்கு தாக்கல் செய்துள்ளார்.

அதில் தலைவர் மாவை சேனாதிராஜா, பதில் செயலாளர் ப. சத்தியலிங்கம், நிர்வாகச் செயலாளர் சேவியர் குலநாயகம் ஆகியோர் எதிராளிகளாக குறிப்பிடப்பட்டுள்ளனர்.

மட்டக்களப்பு - கோட்டைக் கல்லாறைச் சேர்ந்த

11

## புலமைப்பரிசில் பரீட்சை மீண்டும் நடத்தப்படாது!

கொழும்பு, ஒக். 15

ஐந்தாம் தர புலமைப்பரிசில் பரீட்சையை மீண்டும் நடத்த வேண்டிய அவசியமில்லை என பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர நேற்று தெரிவித்தார்.

பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் விசேட செய்தியாளர் மாநாட்டை அழைத்து இது தொடர்பான அறிவிப்பை வெளியிட்டார்

அதன்படி சர்ச்சைக்குரிய 03 கேள்விகளுக்கு புள்ளிகளை வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இதேவேளை, சர்ச்சையான தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை இந்த வருடம் மீண்டும்

11

## வங்கக் கடல் பகுதிகளில் கன மழை, பலத்த காற்று!

கொழும்பு, ஒக். 15

அடுத்த 24 மணி நேரத்திற்கு தெற்கு வங்கக் கடல் பகுதிகளில் கன மழை, பலத்த காற்று மற்றும் கடல் சீற்றத்துடன் இருக்கும் என வானிலை ஆய்வு மையம் நேற்று மாலை எச்சரிக்கை விடுத்துள்ளது.

தென்கிழக்கு வங்கக் கடலில் நேற்று குறைந்த காற்ற ழுத்த தாழ்வு மண்டலம் உருவாகியுள்ளதாக தெரிவிக்கப் பட்டுள்ளது.

11

## சீரற்ற காலநிலை காரணமாக 40ஆயிரம் குடும்பங்கள் பாதிப்பு

கொழும்பு, ஒக். 15

சீரற்ற காலநிலை காரணமாக 40ஆயிரத்திற்கும் அதிக குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக பாதுகாப்புச் செயலாளர் எயார் வைஸ் மார்ஷல் சம்பத் தூய்யகொந்தா தெரிவித்துள்ளார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

சீரற்ற காலநிலையின் காரணமாக கொழும்பு, கம்பஹா, களுத்துறை,

11

## அர்ஜுன் அலோசியஸ் உள்ளிட்ட மூவருக்கு ஆறு மாதங்கள் சிறை!

### வரி ஏய்ப்பு செய்த குற்றச்சாட்டில்

கொழும்பு, ஒக். 15

பெறுமதி சேர் வரி ஏய்ப்புச் சம்பவம் தொடர்பில் டபிள்யூ.எம். மெண்டிஸ் நிறுவனத்தின் பணிப்பாளர் அர்ஜூன் அலோசியஸ் உள்ளிட்ட மூவருக்கு கொழும்பு நீதவான் நீதிமன்றம் 6 மாத சிறைத்தண்டனை விதித்துள்ளது.

2016ஆம் ஆண்டு முதல் 2019ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் அரசாங்கத்திற்கு செலுத்த வேண்டிய 3.5 பில்லியன் ரூபாய் பெறுமதி சேர் வரியை செலுத்துவதில் தவறிழைத்தமைக்காக உள்நாட்டு இறை வரித் திணைக்களம் குறித்த பிரதிவாதிகளுக்கு எதிராக இந்த வழக்கை தாக்கல்

11

## ஈஸ்டர் தாக்குதல் அறிக்கைகளை அநுர 7 நாளில் வெளியிடவேண்டும்!

### இல்லையேல் நான் வெளியிடுவேன் என்கிறார் உதய கம்மன்பில

கொழும்பு, ஒக். 15

ஈஸ்டர் தாக்குதல் தொடர்பாக இதுவரை வெளியிடப்படாத இரண்டு அறிக்கைகளையும், ஜனாதிபதி இன்னும் 7 நாட்களில் வெளியிடாவிட்டால், அவற்றை தான் வெளியிடுவேன் என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

மேலும், குறித்த அறிக்கைகளில் எந்தவொரு பக்கமும் காணாமல் போகவில்லை என்றும் எந்தவொரு விசாரணை அறிக்கையும் மாயமாகவில்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஜனாதிபதி அநுர குமார திநாயக்க, நீர்கொழும்பு

11

## ஐ.நா. அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் உதவிச் செயலாளர் அநுரவுடன் சந்திப்பு

கொழும்பு, ஒக். 15

ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் உதவிச் செயலாளர் நாயகம் கன்னி விக்னராஜா நேற்று முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவை சந்தித்தார்.



ஆட்சி நிர்வாகம், அரசியலமைப்பு சீர்திருத்தம், மற்றும் தேர்தல் முறைமை என்பன தொடர்பில் இதன் போது முக்கிய கவனம் செலுத்தப்பட்டதாக ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

"பல் பரிமாண அபாய சூழ்நிலைகளைப் புரிந்து

11

## வெள்ளக் கட்டுப்பாட்டுக்கு நிலையான தீர்வு அவசியம்

### ஜனாதிபதி அநுர வலியுறுத்து

கொழும்பு, ஒக். 15

சீரற்ற காலநிலையால் பாதிக்கப்பட்ட கொழும்பு, கம்பஹா, புத்தளம் மற்றும் களுத்துறை மக்களுக்கு உடனடி நிவாரணம் வழங்கும் பணிகளை முதன்மைப் படுத்துமாறு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க வலியுறுத்தினார்.

அடிக்கடி ஏற்படும் வெள்ளத்தை கட்டுப்படுத்துவதற்கு சரியான மற்றும் நிலையான வேலைத்திட்டம் அவசியம் எனவும் அவர் குறிப்பிட்டார்.

நிவாரணம் வழங்குவதற்காக கூடுதலாக ஒதுக்கப்பட்டுள்ள 50 மில்லியன் ரூபாவுக்கு மேலதிகமாக பணம் தேவைப்படுமாயின், அதற்கான

11

## மதுபானசாலை அனுமதிப்பத்திரம் பெற்றவர்கள் எம் அணியில் இல்லை

### கூறுகிறார் சரவணபவன்

யாழ்ப்பாணம், ஒக். 15

மதுபானச்சாலைக்கான அனுமதிப்பத்திரங்களைப் பெற்றவர்கள் எவரும் தமது அணியில் இல்லை என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஈஸ்வரபாதம் சரவணபவன் தெரிவித்துள்ளார்.

ஜனநாயக தமிழ் அரசுக் கூட்டமைப்பு என்ற பெயரில் யாழ்ப்பாண தேர்தல் மாவட்டத்தில் சுயேச்சையாக போட்டியிடும் ஈ.சரவணபவன் நேற்று ஊடகங்களுக்கு கருத்துரைக்கையிலே இதனைத் தெரி வித்துள்ளார்.

அத்துடன் மதுபானச்சாலை அனுமதிப்பத்திரத்தை பெற்றவர்களின் விவரங்களை ஜனாதிபதி அநுரகுமார பாராளுமன்றத் தேர்தலுக்கு முன்னதாக வெளியிட வேண்டுமெனவும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.(அ)

## இலஞ்சம், ஊழலை சிறிதும் சகித்துக்கொள்ளமாட்டோம்

### விசாரணைகள் ஏற்கனவே ஆரம்பம் என்கிறார் அமைச்சர் விஜித ஹேரத்

கொழும்பு, ஒக். 15

நாங்கள் வழங்கியுள்ள உறுதிமொழிகளுக்கு ஏற்ப இலஞ்சம் ஊழலை சிறிதளவும் சகித்துக்கொள்ளமாட்டோம்.இலஞ்சம் ஊழல் பற்றிய சாத்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு ஏற்கனவே ஊழல் பற்றிய விசாரணைகளை ஆரம்பித்துள்ளது என வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்

கொழும்பை தளமாக வெளிநாட்டு இராஜதந்திரிகள் மத்தியில் உரையாற்றுகையில் அவர் இதனை கூறினார்.

11

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளாதார நெருக்கடியும் சர்வதேச அழுத்தங்களும்

## யாழில் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஒக். 15

"பொருளாதார நெருக்கடியும் சர்வதேச அழுத்தங்களும் மாற்றத்துக்கான மக்களின் அவாவும்" என்ற தலைப்பிலான சமூக விஞ்ஞான படிப்பு வட்ட கலந்துரையாடல் எதிர்வரும் 19ஆம் திகதி வியாழக்கிழமை மாலை 4 மணிக்கு கே. கே. எஸ். வீதி கொக்குவில் சந்தியிலுள்ள தேசிய கலை இலக்கிய பேரவையின் கவிஞர் முருகையன் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கலந்துரையாடலின் தொடக்கவுரையை சொ. சிவபாலனும், கருத்துரையை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் சமூகவியல் துறையின் சிரேஷ்ட விரிவுரையாளரும் பொருளாதார ஆய்வாளருமான கலாநிதி அகிலன் கதிர்காமர் ஆகியோர் ஆற்றவுள்ளனர். தொடர்ந்து சபையோரின் கருத்துரைகளுடன் கலந்துரையாடல் நடைபெறவுள்ளது. ஆர்வமுள்ள அனைவரையும் கலந்துகொள்ளுமாறு சமூக விஞ்ஞானப் படிப்பு வட்டத்தினர் அழைப்பு விடுத்துள்ளனர். (எ)

# பாடசாலை மாணவர்களை புறக்கணிக்கும் அரச பஸ்கள்

கிளிநொச்சி, ஒக். 15

கிளிநொச்சியில் பாடசாலை மாணவர் களை பஸ்களில் ஏற்றாது அரச பஸ்கள் பயணிக்கும் சம்பவம் தொடர்கதையாகி வருகின்றது.

இன்றும் அவ்வாறு மாணவர்களை பஸ்கள் ஏற்றிச் செல்லாத நிலையில், பொலிஸார் தமது வாகனத்தில் மாணவர்களை பாடசாலையில் கொண்டு சென்று விட்டுள்ளனர்.

குறித்த சம்பவம் நேற்றுக் காலை கிளிநொச்சி - முகமாலை, ஏ-9 வீதி பளைப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

கிளிநொச்சி ஏ-9 வீதியின் இத்தாவில், முகமாலை மற்றும் உமையாள்புரம் ஆகிய பகுதிகளில் உள்ள பாடசாலை மாணவர்களை அரச பஸ்கள் ஏற்றிச் செல்லாத நிலைமை காணப்படுகின்றது.

மாணவர்கள் பாடசாலைக்குச் செல்ல வேண்டியுள்ள ஏ -9 வீதியூடாக பல போக்கு வரத்து சேவைகள் இடம்பெறுகின்ற போதும் பாடசாலை மாணவர்களுக்கான சேவையை வழங்குவதில் பஸ் சாரதிகள், நடத்துநர்கள் சரியாக செயல்படவில்லை என மக்கள் தொடர்ச்சியாக குற்றம் சுமத்தி வருகின்றனர்.

மாணவர்கள் வீதியில் நின்று பஸ்ஸை மறிக்கும்போதும் அவர்களை ஏற்றாது செல்கின்ற அரச மற்றும் தனியார் பஸ்களால் மாணவர்கள் தொடர்ச்சியாக பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

இதன் காரணமாக பாடசாலைக்கு உரிய நேரத்துக்கு செல்லவோ, பாடசாலையிலி ருந்து மீண்டும் உரிய நேரத்துக்கு வீடு திரும் பவோ முடியாத நிலைமையில் மாணவர்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

இந்த விடயம் தொடர்பில் தொடர்ச்சியாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் பலருக்கு தெரியப்படுத்தியும் ஊடகங்களில் பல்வேறு தடவைகள் இந்த விடயம் தொடர்பில் சுட் டிக் காட்டப்பட்டும் இதுவரை இந்த பிரச்னை தீர்க்கப்படாத பிரச்னையாகவே காணப்படுகிறது எனவும் பெற்றோர் விசனம் வெளியிட்டுள்ளனர். (அ)

# மார்பகப் புற்றுநோய் குறித்து கிளிநொச்சியில் விழிப்புணர்வு



கிளிநொச்சி, ஒக். 15

மார்பகப் புற்றுநோய் தொடர்பான விழிப்புணர்வு நடை பேரணி ஒன்று கிளிநொச்சியில் நேற்று இடம்பெற்றது.

கிளிநொச்சி மாவட்ட பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் ஏற்பாட்டில் மார்பகப் புற்றுநோய் தொடர்பான குறித்த விழிப்புணர்வு நடை பேரணி தருமபுரம் வைத்தியசாலையில் இருந்து ஆரம்பிக்கப்பட்டு கண்டாளைப் பிரதேச செயலகம் வரை நடைபெற்றது.

அங்கு மார்பக புற்று நோய் தொடர்பான விழிப்புணர்வு நடைபெற்றது.

பிராந்திய தொற்றுநோய் வைத்தியர் க.றஞ்சன், கிளிநொச்சி மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர், சுகாதார பரிசோதகர்கள் மற்றும் வைத்தியர்கள் இராணுவத்தினர் பொலிசார், தாதியர்கள், கண்டாவளைப் பிரதே செயலக உத்தியோகத்தர்கள், வலயக் கல்விப் பணிப்பாளர், கண்டாளை பாடசாலை மாணவர்கள், கிராம சேவையாளர்கள் மற்றும் பொது அமைப்புகள், பிரதிநிதிகள் என நூற்றுக்கும் அதிகமானவர்கள் இதில் கலந்து கொண்டனர். (அ)




# யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற டெங்கு விழிப்புணர்வு!

யாழ்ப்பாணம், ஒக். 15

டெங்கு தொடர்பான விழிப்புணர்வு நிகழ்வு மாவட்ட பதில் அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் நேற்று முற்பகல் 11.00 மணிக்கு யாழ்.செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் கடந்த 13 ஆம் திகதி முதல் இன்று வரை டெங்குக் கட்டுப்பாட்டு களப் பரிசோதனை நடை முறைப் படுத்தப்பட்டு வருவதற்கு அமைவாக, நேற்றைய தினம் அனைத்து அரச மற்றும் அரசார்பற்ற நிறுவனங்கள் மற்றும் தனியார் அலுவலகங்களில் மேற்கொள்ள திட்டமிடப்பட்டது.

இதன் ஒரு அங்கமாக நேற்று யாழ்ப்பாண மாவட்டத்தில் டெங்கு நோய் தொடர்பான அறிமுகம், டெங்கு நோயின் தற்போதைய நிலைமை, டெங்கு நோய் வராமல் தடுக்க மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள், டெங்கு நோய் ஏற்பட்டால் பின்பற்ற வேண்டிய வழிமுறைகள் போன்ற விடயங்கள் தொடர்பாக பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ. கேதீஸ்வரனால் விழிப்புணர்வு கருத் துரை வழங்கப்பட்டது.

இந்த நிகழ்வில் மாவட்ட பதவிநிலை உத்தியோகத்தர்கள், உத்தியோகத்தர்கள், சுகாதார வைத்திய அதிகாரிகள் மற்றும் பொது சுகாதார உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (அ-05)

# 150ஆவது அஞ்சல் தினத்தை முன்னிட்டு யாழ்ப்பாணத்தில் இரத்த தான முகாம்

யாழ்ப்பாணம், ஒக். 15

150ஆவது அஞ்சல் தினத்தை முன்னிட்டு காங்கேசன்துறை தபாலகத்தினால் மாபெரும் இரத்த தான முகாம் நேற்று நடத்தப்பட்டது.



காங்கேசன்துறை தபாலக அஞ்சல் அதி பர் திருமதி சுதாகரன் சசிகாலாவின் தலை மையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

தபால் ஊழியர்கள் மற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்கள், குருதிக் கொடையாளர்கள் என பலர் இந்த உயிர்காக்கும் உன்னத பணியில் ஈடுபட்டனர். (அ-05)

# தமிழரசில் இருந்து பிரிந்தோர் இன்று சங்கை ஊதுகிறார்கள்

## கூறுகிறார் டக்ளஸ் தேவானந்தா



முல்லைத்தீவு, ஒக். 15

தமிழரசு கட்சியில் இருந்து பிரிந்தவர்களே இன்று சங்கை ஊதிக் கொண்டு திரிகிறார்கள் என முன்னாள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார். ஈழ மக்கள் ஜன நாயக கட்சியின் முல்லைத்தீவு மாவட்ட தலைமைக் காரியாலயத்தில் நேற்று காலை கட்சியின் முக்கியஸ்தர்கள் மற்றும் வேட்பாளர்கள் உள்ளிட்ட கட்சியின் உறுப்பினர்கள், பொதுமக்கள் இடையில் கலந்துரையாடல் இடம்பெற்றது . அந்தக் கலந்துரையாடலின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கொழும்பில் ஏன் நீங்கள் போட்டி போடுகின்றீர்கள் என சிலர் கேட்டிருந்தார்கள். நீண்ட காலமாக ஐக்கியப்படவேண்டும், தமிழ் மக்களின் ஒற்றுமையை தென்னிலங்கைக்கு, இந்தியாவுக்கு, சர்வதேசத்திற்கு காட்டவேண்டும். அப்போதுதான் மக்களின் பிரச்னைகளை தீர்க்கலாம் எனக் கூறிகொண்டிருக்கிறார்கள்.

இது நேற்று இன்றில்லை 1974ஆம் ஆண்டு தொடக்கம் மக்களை உசுப்பேத்தி விடுவதற்காக கோஷங்களாக அரசியலில் திட்டங்களாக, கருத்தாக இது இருந்திருக்கின்றது. ஆனால் 74ஆம் ஆண்டில் இருந்து இக்கருத்துக்கள் முன்வைக்கப்பட்டாலும் தமிழ் மக்களுக்கான பிரச்னைகள் தீர்ந்ததாக இல்லை. தீரா பிரச்னையாக, பிரச்னை அதிகரித்துதான் இருக்கின்றது.

தமிழரசுக் கட்சியை எடுத்தால் அது இன்று மூன்று கட்சிகளாக பிரிக்கப்பட்டுள்ளது.

தமிழரசுக் கட்சி, ஜன நாயக தமிழரசுக் கட்சி, சுயேச்சை என பிரிந்திருக்கிறார்கள். தமிழரசுக் கட்சி என இருப்பவர்களே இரண்டு அணியாக பிரிந்து செயல்படுகின்றார்கள். ஜன நாயகத்தில் கருத்து சுதந்திரம் இருக்கவேண்டும். அதுதான் அடிப்படை. ஆனால் இங்கு நல்ல நோக்கத்திற்காக அந்த சுதந்திரத்தைப் பயன்படுத்தாமல் அவர்கள் தம் சுயலாபத்திற்காகத் தான் பயன்படுத்துகின்றார்கள்.

அதனைவிட தமிழரசுக் கட்சியில் இருந்து பிரிந்தவர்கள் இன்று சங்கை ஊதிக் கொண்டு வந்திருக்கிறார்கள்.

ஆனால் ஈ.பி.டி.பி. அப்படி அல்ல. ஈ.பி.டி.பி. அதில் இருந்து மாறுபட்டது. ஈ.பி.டி.பி. கொள்கைகளை நீண்ட காலமாக முன்வைத்து அதனை அடைவதற்கான வேலைத்திட்டங்களை முன்வைத்து வருகின்றது.

இன்றும் அதை நோக்கியே செயற்பட்டு வருகின்றது. ஈ.பி.டி.பிக்கு போதிய ஆசனங்கள் இல்லை. போதிய ஆசனங்கள் இருக்குமாக இருந்தால் மக்களுடைய அபிவிருத்திக்கான, அரசியல் உரிமைக்கான தீர்வு என மூன்று வகையான பிரச்னைகளையும் தீர்க்க முடியும் - என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු
15.10.2024 செவ்வாய்க்கிழமை
பிலவ வருடம், புரட்டாதி 29

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# என்ன செய்ய முடியுமென்பதை மட்டும் கூறுங்கள்?

இலங்கை தமிழ் அரசு கட்சி தொடர்ந்தும் குழப்பங்களின் கூடாரமாகிக் கொண்டிருக்கின்றது. ஓர் அணியினர் வெளியேறியிருக்கும் நிலையில் இன்னொரு புதிய வழக்கை எதிர்கொள்ளக் கூடிய நிலை ஏற்பட்டிருக்கின்றது. பாரம்பரிய கட்சியொன்று சின்னாபின்னமாகிக் கொண்டிருக்கின்றது. இந்த நிலையில் கட்சியின் முக்கியஸ்தர்களில் ஒருவரான எம்.ஏ. சுமந்திரன், ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் மீது விரல் நீட்டிக் கொண்டிருக்கின்றார்.

அதற்கு அவர்கள் பதிலளித்திருக்கின்றார்கள். இதற்கிடையில் எரிகிற நெருப்பில் எண்ணெய் ஊற்றிவிடும் வேலையை பொதுச் சபை என்னும் பெயரில் தங்களை அடையாளப்படுத்துவர்கள் செய்துகொண்டிருக்கின்றனர். சங்குச் சின்னத்தில் போட்டியிடும் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியை எதிர்க்க வேண்டும் என்பது மட்டும்தான் அவர்களது நோக்கம் போல் தெரிகின்றது. ஒன்றை எதிர்க்கின்ற போது, அது இன்னொருவருக்கான ஆதரவாக மாறுகின்றது என்னும் சாதாரண உண்மையைக் கூட புரியாமல் அவர்கள் இதனை செய்யவில்லை என்றே தெரிகின்றது.

தமிழ் அரசு கட்சி மோசமான குழப்பங்களின் கூடாரமாகிக் கொண்டிருக்கும் நிலையில், அடுத்தவர்களை நோக்கி எவ்வாறு விரல் நீட்ட முடியும்? எஸ்.ஜே.வி.செல்வநாயகத்தால் உருவாக்கப்பட்ட கட்சி அதன் அடிப்படைகள் அனைத்தையும் இழந்து வெறும் தேர்தலுக்கான கட்சியாக மாறிவிட்டது. அந்த நிலையைக் கூட எதிர்காலத்தில் தமிழ் அரசு கட்சியால் பேணிப் பாதுகாக்க முடியுமா என்பதும் கேள்விக்குறிதான்.

தமிழ்த் தேசியத்தை முன்வைத்து அரசியலை முன்னெடுக்க முற்படுவர்கள் - முதலில் மற்றவர்களைப் பற்றிப் பேசுவதை விடுத்து, தங்களால் என்ன செய்யமுடியுமென்பதைக் கூற வேண்டும். இதுவரையில் தாங்கள் மேற்கொண்ட முயற்சிகள் என்ன? - ஏன் அந்த முயற்சிகள் தோல்வியடைந்தன என்பதைக் கூறவேண்டும். அவ்வாறில்லாது மற்றவர்களைப் பற்றியே பேசிக் காலத்தை கடத்தலாம் என்று எண்ணினால் அதன் பொருள், இவ்வாறு மேடைகளில் கத்துபவர்கள் எதனையும் ஆக்கபூர்வமாக முன்னெடுக்கவில்லை என்பதாகும்.

யுத்தம் முடிவுற்று பதினைந்து வருடங்கள் ஆகின்றன. இந்தக் காலத்தில் தமிழ் மக்கள் சார்பான அனைத்து முடிவுகளையும் சம்பந்தனும் அவருக்கு ஆதரவாக சுமந்திரனுமே முன்னெடுத்திருந்தார்கள். இந்தத் தீர்மானங்களில் ஏனைய கட்சிகளின் தலைவர்கள் பெரியளவில் பங்குபற்றியிருக்கவில்லை.

இந்த நிலையில் தனது நகர்வுகள் ஏன் தோல்வியுற்றன - தன்னால் ஏன் அரசியலை சரியாக புரிந்துகொள்ள முடியாமல் இருந்தது என்பதைத்தான் உற்றுநோக்க வேண்டும் ஆனால், இந்த விடயத்தை உற்று நோக்கும் துணிவில்லாத காரணத்தினால்தான், மற்றவர்கள் பற்றியே சதா பேசவேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கின்றது. கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான அகில இலங்கை தமிழ் காங்கிரஸும் இதனைத்தான் இதுவரையில் செய்து வந்திருக்கின்றது. சற்று மாற்றி யோசியுங்கள். மற்றவர்களை பற்றிப் பேசுவதை விடுத்து. உங்களால் என்ன செய்ய முடியுமென்பதைப் பற்றிப் பேசுங்கள். மக்கள் நன்மையடைவார்கள்.

## தும்பளை நாச்சிமார் கோவில் மகா கும்பாபிஷேகம்

வடமராட்சி, ஒக். 15

பருத்தித்துறை தும்பளை தெற்கு நாச்சிமார் கோவிலின் மகா கும்பாபிஷேகம் எதிர்வரும் 26ஆம் தகதி சனிக்கிழமை நடை பெறவுள்ளது. இதனை முன் னிட்டு 25ஆம் திகதி வெள்ளிக்கிழமை கர்மாரம்பம் ஆரம்பமாகி தொடர்ந்து பக்தர்கள் எண்ணெய்க்காப்பு சாத்துதல் நடைபெறவுள்ளது.

இவ்விரு தினங்களும் கலைஞர்களால் பறை வாத்திய கச்சேரி நடைபெறவுள்ளது. (எ)

## மதுபானசாலைக்கு அனுமதி பெற்றோர் விவரங்களை உடனே வெளியிடுங்கள்!

### ஜனாதிபதி அநுரவிடம் சரவணபவன் வலியுறுத்தல்

யாழ்ப்பாணம், ஒக். 15

மதுபானசாலைக்கு அனுமதி பெற்றவர்களின் விவரங்களை ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க, பாராளுமன்றத் தேர்தலுக்கு முன்னர் வெளியிட வேண்டும் என்று முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஈஸ்வரபாதம் சரவணபவன் வலியுறுத்தியுள்ளார். மதுபானசாலைக்கான அனுமதியை பெற்றவர்கள் எவரும் எமது அணியில் இல்லை என்றும் அவர் கூறினார்.

ஜனநாயக தமிழ் அரசுக் கூட்டமைப்பு என்ற பெயரில் யாழ்ப்பாண தேர்தல் மாவட்டத்தில் சுயேச்சையாக போட்டியிடும் வேட்பாளர் ஈ. சரவணபவனின் ஊடகச் சந்திப்பு

நேற்று நடைபெற்ற போதே இவ்வாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,



"மக்கள் பக்கம் இருப்பதாக கூறும் அநுரகுமார திஸநாயக்க

இன்னமும் மதுபான சாலை அனுமதிப்பத்திரத்தை பெற்றவர்களின் விவரங்களை வெளியிடாமல் வைத்துள்ளார்.

பொதுத் தேர்தலுக்குப் பின்னர் தான் மதுபான சாலைக்கு அனுமதி பெற்றவர்களின் பட்டியல் வெளி வருமோ தெரியவில்லை.

மதுபானசாலை அனுமதிப் பத்திரங்கள் சிலரிடம் இருக்கிறது என்பது புலனாகிறது. சிலர் இல்லை என்று சொல்லிக்கொள்கின்றார்கள். சிலர் வேறு பெயர்களில் மாற்றி வைத்திருக்கின்றார்கள். எத்தனையோ விடயங்கள் நடந்தேறிவிட்டன. பணப் பரிமாற்றங்களும் நடந்து முடிந்துவிட்டது.

தேர்தலுக்குப் பின்னர் அநுரகுமார திஸநாயக்க பெயர் விவரங்களை வெளியிடுவதால் எந்தப் பிரயோசனமும் இல்லை.

நீங்கள் தெற்கில் மட்டுமல்ல வடக்கு - கிழக்கு என எங்கும் ஊழலற்ற ஆட்சியை நிறுவுவதாக இருந்தால் உண்மையை வெளியிடுங்கள்" - என்றார். (எ-05)

## தென்னிலங்கையின் அரசியல் அலையில் அள்ளுண்டு போவதற்கு விரும்பவில்லை

### மாற்றத்துக்காக வாக்களிக்குமாறு தமிழர் சம உரிமை இயக்கம் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஒக். 15

தமிழ் மக்களின் அடிப்படை அரசியல் அபிலாசைகள் இதுவரை கிடைக்காத நிலையில் தென்னிலங்கையில் ஏற்பட்டுள்ள அரசியல் மாற்றத்துக்குள் அள்ளுண்டு போக தமிழ் மக்கள் விரும்பவில்லை என தெரிவித்துள்ள தமிழர் சம உரிமை இயக்கம், தூய மாற்றத்துக்காக வாக்களிக்குமாறு தமிழ் மக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலில் யாழ்ப்பாணத்தில் பசு சின்னத்திலும் வன்னியில் பூட்டு சின்னத்திலும் போட்டியிடும் தமிழர் சம உரிமை இயக்கம் விடுத்துள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ் மக்கள் யுத்தத்துக்குப் பின்னரான 15 ஆண்டுகளில் தற்போது களத்திலுள்ள அனைத்து தமிழ் கட்சிகளையும் நம்பி களைத்துவிட்டனர். நாம் இதுவரை வாக்களித்து தெரிவுசெய்தவர்கள் தங்களுக்குள் அடிபடுவதிலும் சுகபோகங் களை அனுபவிப்பதிலும் அதனை விட மதுபான சாலை அனுமதிப் பத்திரங் களைப் பெற்று மக்களை போதைக்கு அடிமையாக்கி இளையோரை அழிக்கத் துணைபோகின்றனரே அன்றி மக்களுக்கான எந்த நல்ல விடயங்களையும் செய்யவில்லை.

தமிழர் தரப்பின் இந்த கையறு நிலையில் தெற்கில் மாற்றத்தை ஏற்படுத்தியோர் வடக்கிலும் காலூன்ற முனைகின்றனர். தமிழர்களுடைய அடிப்படை அபிலாசைகளை சமஷ்டி முறை இணைந்த வடக்கு - கிழக்கு மாநிலமோ சம உரிமைகளோ இன்னும் கிடைக்காத நிலையில், தெற்கின் அலையில் அள்ளுண்டு போக தமிழ் மக்கள் விரும்பவில்லை என மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒக்ரோபர் - 15 செவ்வாய்க்கிழமை
குரோதி வருடம் - புரட்டாதி 29
நல்ல நேரம் : 07.30 - 09.00
ராகு காலம் : 03.00 - 04.30
திதி : துவாதசி




**மேடம்**
திட்டமிட்ட காரியங்கள் கைக்கூடும். சபைகளில் மரியாதை கிடைக்கும். வியாபாரத்தில் விஜபிகள் வாடிக்கையாளர்கள் ஆவார்கள். உத்தியோகத்தில் பாராட்டப்படுவீர்கள். மதிப்பு மரியாதை கூடும்.

**இடபம்**
பிள்ளைகளின் பொறுப்புணர்வு அதிகமாகும். மற்றவர்களுக்காக சில பொறுப்புகளை ஏற்பீர்கள். தலைமையின் நம்பிக்கையை பெறுவீர்கள். மாறுபட்ட அணுகுமுறையால் சாதிக்கும் நாள்.

**மிதுனம்**
இதுவரை இருந்த அலைச்சல், டென்ஷன், கோபம் யாவும் நீங்கும். விலகி நின்ற உறவுகள் விரும்பி வந்து பேசுவார்கள். வியாபாரத்தில் கூடுதல் லாபம் கிடைக்கும். புது அதிகாரி உங்களை மதிப்பார்.

**கடகம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் ஒரே நாளில் முக்கியமான நான்கைந்து வேலைகளை பார்க்க வேண்டி வரும். கூடுதலாக வேலைப் பார்க்க வேண்டி வரும். பொறுப்புணர்ந்து செயல்பட வேண்டிய நாள்.

**சிம்மம்**
ஆடை, ஆபரணம் சேரும். மனைவி வழியில் ஆதரவு பெருகும். வியாபாரத்தில் சில சூட்சுமங்களைப் புரிந்துக் கொள்வீர்கள். உத்தியோகத்தில் வேலைகளை உடனடியாக முடிப்பீர்கள்.

**கன்னி**
வாகன வசதிப் பெருகும். அதிகாரப் பதவியில் இருப்பவர்கள் அறிமுகமாவார்கள். வியாபாரத்தில் வாடிக்கையாளரின் நம்பிக்கையை பெறுவீர்கள். பெருந்தன்மையுடன் நடந்துக் கொள்ளும் நாள்.

**துலாம்**
சேமிக்க வேண்டுமென்ற எண்ணம் வரும். குடும்பத்தின் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் உங்கள் வேலைகளைப் பகிர்ந்துக் கொள்வார்கள்.

**விருட்சிகம்**
பயணங்களால் பயனடைவீர்கள். பழைய கடனைத் தீர்க்க முயற்சி செய்வீர்கள். பணப்பற்றாக் குறையை சமாளிப்பீர்கள். உத்தியோகத்தில் சூழ்ச்சிகளை முறியடிப்பீர்கள். உழைப்பால் உயரும்.

**தனுசு**
விருந்தினர் வருகை அதிகரிக்கும். பேச்சில் கம்பீரம் பிறக்கும். வியாபாரத்தில் அனுபவமிக்க வேலையாட்களை தேடுவீர்கள். உத்தியோகத்தில் சில நுணுக்கங்களை கற்றுக் கொள்வீர்கள்.

**மகரம்**
கணவன் - மனைவிக்குள் இருந்த மனக்கசப்பு நீங்கி மகிழ்ச்சி அதிகரிக்கும். வியாபாரத்தில் சில தந்திரங்களை கற்றுக் கொள்வீர்கள். சக ஊழியர்கள் உதவுவார்கள். புது அத்தியாயம் நாள்.

**கும்பம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் சிக்கலான சவாலான காரியங்களையெல்லாம் கையில் எடுத்துக் கொண்டிருக்காதீர்கள். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை குறையும்.

**மீனம்**
வேலைச்சுமையால் உடல் அசதி வந்து நீங்கும். வாகனத்தை எடுக்கும் முன் எரிபொருள் இருக்கிறதா என பார்த்துக் கொள்ளுங்கள். சக ஊழியர்களால்சங்கடங்கள்வரும். அதிகம்உழைக்கவேண்டும்.

# கடவுச்சீட்டு அலுவலகத்தில் ஊழல் பணம் இருந்தால் உடன் பெறலாம்



**வவுனியா, ஒக். 15**

**வவுனியா கடவுச்சீட்டு அலுவலகத்தில் பணம் கொடுத்தால் கடவுச்சீட்டைப் பெற்றுக் கொள்ளலாம் என்கின்ற ஒரு நிலைமை காணப்படுவதோடு இங்கு ஊழல் நிறைந்து காணப் படுவதாக மக்கள் குற்றஞ்சாட் டியுள்ளனர்.**

வவுனியா கடவுச்சீட்டு அலுவலகத்தில் கடவுச்சீட்டினை பெற்றுக்கொள்வதில் தாம் பெரும் சிரமத்தை எதிர்கொள்வதாக தெரிவித்த மக்கள், இது தொடர்பில் ஊடகங்களுக்கு மேலும் கூறுகையில்,

"தூர இடங்களில் இருந்து அதிகாலை 3 மணிக்கு வரிசையில் நின்று கடவுச்சீட்டை பெறுவதற்கு முயற்சி செய்த போதிலும் 25 பேருக்கு மாத்திரமே கடவுச்சீட்டை வழங்குவோம் எனத் தெரிவித்து ஏனையோரை செல்லுமாறு கூறினர்.

தூர இடங்களில் இருந்து குறிப்பாக முல்லைத்தீவு, யாழ்ப்பாணம், கிழக்கு மாகாணத்தில் இருந்தும் கடவுச்சீட்டை பெறுவதற்காக வருகை தந்த தாம் இவ்வாறு காத்திருக்க வேண்டிய சூழல் ஏற்பட்டிருப்பதாக தெரிவித்தனர்.

இதேவேளை, கடவுச்சீட்டு அலுவலகத்தில் பணியாற்றுவோர் தமக்குத் தெரிந்தவர்களை உள்ளே அழைத்து அவர்களுக்கு கடவுச்சீட்டு வழங்குகின்ற செயல்பாடும் இடம்பெறுவதோடு பணம் கொடுத்தால் கடவுச்சீட்டை பெற்றுக் கொள்ள முடியும் என்கின்ற ஒரு நிலைமையும் காணப்படுகின்றது.

ஊழலை ஒழிக்க வேண்டும் என்று பதவியேற்ற ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க இது தொடர்பில் கவனம் செலுத்தி, வவுனியா கடவுச்சீட்டு அலுவலகத்தில் இடம்பெறும் ஊழல் மோசடியை நிறுத்த வேண்டும். மக்கள் இலகுவாக கடவுச்சீட்டைப் பெறுவதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்"என கோரிக்கை விடுத்தனர்.

(எ)

# மயிலிட்டி கலைமகள் வித்தியாலயத்தில் விமானப்படையால் புதிய கட்டடம் திறப்பு

**யாழ்ப்பாணம், ஒக். 15**

விமானப் படையின் 73ஆவது வருடத்தை முன்னிட்டு வடமாகாணத்தை மையமாகக் கொண்டு ஏற்பாடு செய்யப்பட்ட நட்பின் சிறகுகள் எனும் அமைப்பின் கீழ் "என்னிடமிருந்து வடக்குக்கு ஒரு புத்தகம்" எனும் செயல்திட்டத்தின் மூலம் வடமாகாணத்தில் 73 பாடசாலைகளை புனர்நிர்மாணம் செய்தல், 73 ஆயிரம் புத்தகங்களை பாடசாலை மாணவர்களுக்கு வழங்குதல் 73 ஆயிரம் மரக்கன்றுகளை வடமாகாணம் முழுவதும் நடுதல் எனும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன.



அந்த வகையில் யாழ்ப்பாணம் மயிலிட்டி வடக்கு கலைமகள் மகா வித்தியாலயத்துக்கான புதிய கட்டடம், விமானப் படை தளபதி எயார் மார்ஷல் உதேனி ராஜபக்ஷவால் திறந்து வைக்கப்பட்டது.

அத்தோடு யாழ்ப்பாணம் மாவட்டத்தை சேர்ந்த தெரிவு செய்யப்பட்ட 16 பாடசாலைகளுக்கு மாணவர்களுக்கான புத்தகங்களும் கையளிக்கப்பட்டன. அத்துடன் விமானப்படை தளபதிக்கு கலைமகள் வித்தியாலயத்தின் அதிபரால் நினைவுச் சின்னமும் பாடசாலையின் 200ஆவது வருட நிறைவை முன்னிட்டு வெளியிடப்பட்ட புத்தகமும் வழங்கப்பட்டது. இந்த நிகழ்வில் வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் பற்றிக் நிறஞ்சன் உள்ளிட்ட அதிகாரிகளும் பங் கேற்றனர்.

(எ)

# சந்நிதியான் ஆச்சிரமத்தில் வாராந்த இன்னிசை விருந்தும் உதவி வழங்கலும்





**யாழ்ப்பாணம், ஒக். 15**

யாழ்ப்பாணம், தொண்டமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில் பிரதி வெள்ளிக்கிழமைகளில் நடைபெறும் வாராந்த இன்னிசை நிகழ்வு சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் கலாநிதி மோகனதாஸ் சுவாமிகள் தலைமையில் ஆச்சிம மண்டபத்தில் நடைபெற்றது.

[illegible] ஆரம்பமான நிகழ்வில் கலாவித்தகர் குணராசா நக்கீரனின் குழலும் குரலும் என்ற தெய்வீக இன்னிசை விருந்தில் குரலிசை பாடலும் புல்லாங்குழல் இசை கச்சேரியும் நடைபெற்றது.

இதில் வயலின் இசையை நுண்கலைமாணி இராசரத்தினம் நிரோஜனும்,

கீபோட் இசையை இன்னிசைக் கலைமணி நடேசு செல்வச்சந்திரனும்

மிருதங்கம் இசையை கலாவித்தகர் வரதராஜசர்மா ரமணசர்மா ஆகியோர் வழங்கினர்.

இதில் வறுமைக்கோட்டுக் குட்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்கள் இருவருக்கு துவிச்சக்கர வண்டிகளும் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைப் பண்பாட்டுப் பேரவையின் நிர்வாகிகள், உறுப்பினர்கள், சந்நிதியான் ஆச்சிரம தொண்டர்கள் எலப் பலரும் கலந்து கொண்டனர்.

(எ-02)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சஜித் பிரேமதாஸவை பிரதமராக்குவது உறுதி

## இராதாகிருஸ்ணன் தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 15

**இந்த தேர்தலில் அநேகமானவர்கள் பலமான எதிர்க்கட்சியை அமைப்பதற்காக வாக்கு கேட்கின்றார்கள். ஆனால் ஐக்கிய மக்கள் சக்தி வாக்கு கேட்பது பலமான ஒரு அரசாங்கத்தை அமைப்பதற்காகவும் சஜித் பிரேமதாஸவை பிரதமராக கொண்டு வருவதற்குமே. அதனை நாங்கள் வெற்றி கொண்டே தீருவோம் என மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் நுவரெலியா மாவட்ட தமிழ் முற்போக்கு கூட்டணியின் வேட்பாளருமான வேலுசாமி இராதாகிருஸ்ணன் தெரிவித்துள்ளார்.**



தமிழ் முற்போக்கு கூட்டணியின் முதலாவது தேர்தல் பிரசார கூட்டம் ஹற்றன் கோல்டன் மஹால் மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த கூட்டத்தில் நுவரெலியா மாவட்டத்தில் ஐக்கிய மக்கள் சக்தி சார்பில் போட்டியிடுகின்ற தமிழ் முற்போக்கு கூட்டணியின் வேட்பாளர்களான வேலுசாமி இராதாகிருஸ்ணன், பழனி திகாம்பரம், மயில்வாகனம் உதயகுமார் உட்பட பொதுமக்களும் கலந்துகொண்டனர்.

இங்கு உரையாற்றிய இராதாகிருஸ்ணன் மேலும் தெரிவிக்கையில்-

மலையக மக்களை பொறுத்தவரையில் தமிழ் முற்போக்கு கூட்டணியின் உறுப்பினர்களான நாங்கள் மூவரும் இந்த மக்களுக்கு ஆளும் கட்சியில் இருக்கின்ற பொழுதும் எதிர்க்கட்சியில் இருக்கின்ற பொழுதும் மக்களுக்காக சேவை செய்திருக்கின்றோம். அது மட்டுமல்லாமல் எந்த நேரத்திலும் இந்த மக்களின் துன்ப துயரங்களில் பங்கெடுத்திருக்கின்றோம்.

ஆனால் ஏனைய வேட்பாளர்கள் தேர்தல் காலத்தில் வருவதும் பின்பு காணாமல்போவதும் வழமையான ஒரு விடயமாக மாறிவிட்டது. எனவே இவர்களை மக்கள் புரிந்து கொள்ள வேண்டும். இன்று பலரும் பல சின்னங்களில் பணத்தை பெற்றுக் கொண்டு தேர்தலில் போட்டியிட்டு எமது சிறுபான்மை மக்களின் வாக்குகளை பிரிப்பதில் ஆர்வமாக இருக்கின்றார்கள். இது எமது இனத்திற்கு செய்கின்ற ஒரு சாபக்கேடாகும். இதனை மக்கள் புரிந்து கொள்ளவேண்டும்.

நாங்கள் மூவரும் கடந்த முறை பெற்ற வெற்றியைப் போல இந்த முறையும் வெற்றி பெறுவோம். இந்த மக்களுக்காக வேலை செய்வதற்கு நாங்கள் தயாராக இருக்கின்றோம். எமது மக்கள் சிறுபான்மை மக்களின் உரிமையை பாதுகாத்து கொள்வதற்காகவும் எமது பிரதிநிதித்துவத்தை தக்கவைத்து கொள்வதற்காகவும் சிந்தித்து வாக்களிக்க வேண்டும்.

தமிழ் முற்போக்கு கூட்டணி கொழும்பு, கண்டி, பதுளை, கேகாலை, இரத்தினபுரி ஆகிய அனைத்து மாவட்டங்களிலும் எங்களுடைய வேட்பாளர்கள் வெற்றி பெற்று பாராளுமன்றத்தில் பலமான ஒரு அணியாக நாம் இருப்போம்-என்றார். (அ)

# திசைக்காட்டியில் ஆசனம் வழங்காததால் ஒலிவாங்கி!

## கூறுகிறார் அனுஷா சந்திரசேகரன்

கொழும்பு, ஒக். 15

ஐக்கிய மக்கள் சக்தியில் ஆசனம் கிடைக்காததால் ஐக்கிய மக்கள் குரல் சார்பில் ரஞ்சன் ராமநாயக்கவின் கட்சியில் அவருடன் இணைந்து நுவரெலியா மாவட்டத்தில் பொதுத் தேர்தலில் களம் இறங்கியுள்ளேன் என மலையக மக்கள் முன்னணியின் ஸ்தாபகருமான அமரர் பெரியசாமி சந்திரசேகரனின் புதல்வி அனுஷா சந்திரசேகரன் தெரிவித்தார்.

நுவரெலியாவில் இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பில் அவர் இவ்வாறு கருத்து தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

எம்மை பொருத்தவரை பகிரங்க அரசியல் வேறு. எனது கடந்த கால அரசியல் வேறு. எல்லா விடயத்தையும் நாங்கள் பகிரங்கமாக செய்ய வேண்டிய அவசியமில்லை.

கடந்த பொது தேர்தலில் கணிசமாக நான் இம் மாவட்டத்தில் 17ஆயிரம் வாக்குகளை பெற்றேன். எனக்கு அந்த வாக்குகளை வழங்கிய மக்களுடன் இன்றும் நான் தொடர்பில் தான் இருக்கிறேன். அத்துடன் அவர்களுக்கான விடயங்களை இன்றும் செய்து கொண்டுதான் இருக்கிறேன்.

சில இடங்களில் சில நேரங்களில் அரசியலில் மௌனமும் காக்க வேண்டும். ஆகவே இவ்வளவு நாள் என்னுடைய சேவைகளிலும், அரசியல் செயற்பாட்டிலும் நான் பகிரங்கமாக இருக்கவில்லை.

நான் தேசிய மக்கள் சக்தியில் போட்டியிட நான் அவர்களிடம் ஒரு ஆசனத்தை கேட்டிருந்தேன். அவர்கள் ஆசனம் தருவதாக கூறியிருந்தார்கள். அதற்கான பேச்சுவார்த்தைகளும் செய்யப்பட்டன.

அதேநேரத்தில் அவர்கள் என்னிடம் கூறியது என்னவெனில், அவர்களின் கட்சியில் நீண்ட காலமாக இருந்தவர்களுக்கு ஆசனம் வழங்குவதாகவும் கிட்டத்தட்ட 30 வருடங்களுக்கு மேலாக அக்கட்சியில் இருந்தவர்கள் அல்லது அக்கட்சிக்கு உழைத்தவர்களுக்கே ஆசனம் வழங்குவதாகவும் ஆகையால் எனக்கு ஆசனம் இல்லை எனவும் தெரிவித்தனர்.

ஆனால் நாம் அரசாங்கத்துடன் ஒத்துழைக்கும் விதத்தில் தான் தற்போது ரஞ்சன் ராமநாயக்கவோடு இணைந்து ஐக்கிய மக்கள் குரல் கட்சியில் செயல்பட தொடங்கினோம். காரணம் அரசாங்கம் மாற்றம் ஏற்பட்டுள்ளது. ஆகையால் அரசாங்கத்துடன் இணைந்து செயல்படவே நாம் இவ்வாறு களம் இறங்கியுள்ளோம்-என்றார். (அ)

# நிதி மோசடி குற்றச்சாட்டில் 15 சீனப் பிரஜைகள் கைது!

## 15 தொலைபேசிகளும் 15 கணினிகளும் பறிமுதல்

கொழும்பு, ஒக். 15

இராஜகிரிய, வெலிகட பகுதியில் இணையவழி நிதி மோசடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் 15 சீனப் பிரஜைகள் கைது செய்யப்பட்டுள்ளதாகப் பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

சந்தேக நபர்களிடம், இருந்து 15 தொலைபேசிகளும் 15 கணினிகளும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

கடந்த சில நாட்களாக இணைய வழி நிதி மோசடியில் ஈடுபட்டமை தொடர்பாக பல தகவல்கள் பதிவாகியுள்ளன.

நாடளாவிய ரீதியில் இணையவழி நிதி மோசடியில் ஈடுபட்ட 200க்கும் மேற்பட்ட வெளிநாட்டுப் பிரஜைகள் கைது செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# சீரற்ற காலநிலையால் பாதிக்கப்பட்டோருக்கு உடனடியாக நிவாரணங்களை வழங்க ஏற்பாடு

கொழும்பு, ஒக். 15

நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு நிவாரணங்கள் உரிய வகையில் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் பதில் பணிப்பாளர் நாயகம் அதீப திலகரத்ன தெரிவித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு காலநிலை தொடர்பான அறிவுறுத்தல்களை அவர் வழங்கினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

எதிர்வரும் 24 மணித்தியால காலப்பகுதியில் மேல், சப்ரகமுவ, வடமேல், மத்திய, வடக்கு மாகாணங்கள் மற்றும் காலி, மாத்தறை மாவட்டங்களில் அதிக மழைவீழ்ச்சி பதிவாகும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

மண்சரிவு, வெள்ளம் உள்ளிட்ட ஏதேனும் அனர்த்தங்கள் ஏற்படும் பட்சத்தில் உடனடியாக நடவடிக்கை எடுப்பதற்கு நாம் தயாராக இருக்கிறோம்.

இதேவேளை, சீரற்ற வானிலை காரணமாக 12 மாவட்டங்களில் 29 ஆயிரத்து 980 குடும்பங்களைச் சேர்ந்த 117 ஆயிரத்து 032 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

களுத்துறை, கம்பஹா, கொழும்பு, கிளிநொச்சி, கேகாலை, இரத்தினபுரி, ஹம்பாந்தோட்டை, காலி, பொலன்னறுவை, கண்டி, குருநாகல், புத்தளம் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த மக்கள் அதிக பாதிப்பை எதிர்நோக்கியுள்ளனர்-என்றார். (அ)

# ஆறுகளின் நீர்மட்டம் அதிகரித்து வருகிறது

## தாழ் நிலங்களில் வசிக்கும் பொதுமக்களே அவதானம்

கொழும்பு, ஒக். 15

நிலவும் மழையுடனான காலநிலையைத் தொடர்ந்து ஆறுகளின் நீர்மட்டமும் அதிகரித்து வருவதாக நீர்ப்பாசனத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதன்படி, களு கங்கையின் நீர்மட்டமானது மகுர பகுதியில் அதிகரித்து வருவதுடன், ஜின் கங்கையின் நீர்மட்டமானது பத்தேகம பகுதியிலும் அதிகரித்து வருவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

குறித்த ஆறுகளை அண்டிய தாழ் நிலப்பகுதிகளில் வசிக்கும் மக்கள் மிகுந்த அவதானத்துடன் செயற்படுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அத்துடன், களனி கங்கையின் நலகம பகுதியிலும் அத்தனகலு ஓயாவின் துனமலே பகுதியிலும் வெள்ளம் ஏற்படுவதற்கான வாய்ப்பு காணப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக 8 மாவட்டங்களுக்கு விடுக்கப்பட்ட மண்சரிவு அபாய எச்சரிக்கை தொடர்ந்தும் அமுலில் உள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன்படி, கொழும்பு மாவட்டத்தின் சீதாவாக்கை மற்றும் பாதுக்க பிரதேச செயலகப் பிரிவுகளுக்கும், இரத்தினபுரி மாவட்டத்தின், எஹலியகொட, கிரியெல்ல, கலவானை, இரத்தினபுரி, குருவிட்ட மற்றும் எலபாத்த ஆகிய பிரதேச செயலக பிரிவுகளுக்கும் 2ஆம் நிலை மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன், கேகாலை மாவட்டத்தின் மாவனெல்ல, கேகாலை, வரக்காபொல, தெஹியோவிட்ட மற்றும் யட்டியந்தோட்ட ஆகிய பிரதேச செயலக பிரிவுகளுக்கும், களுத்துறை மாவட்டத்தின் ஹொரணை, வலல்லாவிட்ட, தொடங்கொட, இங்கிரிய மற்றும் மத்துகம ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகளுக்கும் 2ஆம் நிலை மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (அ)

# ஜீப் வண்டி-ஓட்டோ மோதி விபத்து; மூன்றரை வயது குழந்தை மரணம்!

கொழும்பு, ஒக். 15

கம்பளை நகரில், கம்பளை திசையிலிருந்து நாவலப்பிட்டி திசை நோக்கி பயணித்த ஜீப் வண்டி ஒன்று, முன்னால் பயணித்த ஓட்டோவுடன் மோதி இடம்பெற்ற விபத்தில் குழந்தை ஒன்று உயிரிழந்துள்ளது.

இந்த விபத்து நேற்று முன்தினம் பிற்பகல் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

முன்னால் சென்ற ஓட்டோ மீது ஜீப் வண்டி மோதியதில் ஓட்டோ கவிழ்ந்து அதில் இருந்து சாரதியும் குழந்தையும் தூக்கி வீசப்பட்டனர்.

பின்னர் ஜீப் வண்டியும் முன்னால் ஓடி வீதிக்கு அருகில் இருந்த வர்த்தகம் செய்யும் வண்டியுடனும் மற்றுமொரு ஓட்டோவுடனும் மோதியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தில் படுகாயமடைந்த ஓட்டோச் சாரதி, சிறுவன் மற்றும் வர்த்தகத்தில் ஈடுபட்டு வந்த ஒருவரும் கம்பளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டபோதும் குழந்தை உயிரிழந்தது.

சம்பவத்தில் கம்பளை, இல்லவத்துர பகுதியைச் சேர்ந்த மூன்றரை வயதுடைய ஆண் குழந்தையே உயிரிழந்தது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடந்த அரசுகளில் அதிக அமைச்சர்கள் ஆயினும் முன்னேற்றம் ஏற்படவில்லை!

## திப்பட்டுவாவே சுமங்கல தேரர் கவலை

கொழும்பு, ஒக். 15

**கடந்த காலங்களில் அமைச்சர்கள், பிரதியமைச்சர்கள் மற்றும் இராஜாங்க அமைச்சர்கள் அதிக எண்ணிக்கையில் இருந்த போதிலும், சில துறைகளில் முன்னேற்றம் காணப்படவில்லை என மல்வத்தை பீடத்தின் பிரதான பீடாதிபதி திப்பட்டுவாவே சிறீ சித்தார்த்த சுமங்கல மகாநாயக்க தேரர் கவலை தெரிவித்துள்ளார்.**

புத்தசாசன அமைச்சின் செயலாளர் ரஞ்சித் ஆரியரத்னவை நேரில் சந்தித்துப் பேசும் போதே பிரதம தேரர் மேற்கண்டவாறு கூறினார்.

அமைச்சர்களின் எண்ணிக்கையை மட்டுப்படுத்துவதற்கான புதிய அரசாங்கத்தின் தீர்மானத்திற்கு பாராட்டு தெரிவித்த அவர், எல்லா வகையிலும் இது ஒரு நல்ல நடவடிக்கை என்று குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

புதிய அரசாங்கம் அதிக எண்ணிக்கையில் அமைச்சர்களை நியமிக்க மாட்டோம் என்று அறிவித்திருப்பது மிகவும் பாராட்டுக்குரியது. வெறும் மூன்று அமைச்சர்களுடன் இந்த அரசு செயல்பட்டு வருவது பாராட்டத்தக்கது. கடந்த காலங்களில் நூற்றுக்கணக்கான அமைச்சர்கள் பதவி வகித்த போதிலும், சில பகுதிகளில் பணிகள் நடைபெறவில்லை. பொதுமக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்படவில்லை. விகாரை தேவலகம் கட்டளைச் சட்டத்தில் உள்ள பல சரத்துக்களுக்கு திருத்தங்கள் தேவை, அது எவ்வாறு சீர்திருத்தப்பட வேண்டும் என்பதற்கான எங்கள் முன்மொழிவுகளுடன் ஒரு ஆவணத்தை நாங்கள் தயாரித்துள்ளோம். இந்த அமைச்சினால் செய்ய வேண்டிய பணிகள் ஏராளம். இருப்பினும், மூன்று அமைச்சர்கள் மட்டுமே நாட்டை நிர்வகிப்பதால், எல்லாவற்றையும் நிவர்த்தி செய்வது கடினம்-என்றார்.

மகாநாயக்கர்களுடனான சந்திப்பின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த ஆரியரத்ன-

எதிர்வரும் அரசியலமைப்பு சீர்திருத்தத்தின் போது அரசியலமைப்பின் ஒன்பதாவது உறுப்புரை நீக்கப்படும் என தவறான தகவல்கள் பரப்பப்படுகின்றன. ஜனாதிபதியோ அல்லது சம்பந்தப்பட்ட அமைச்சர்களோ அவ்வாறான கருத்தை வெளியிடவில்லை. ஒன்பதாவது உறுப்புரையில், பௌத்த மதத்திற்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும், மற்ற மதங்களை சமமாக நடத்த வேண்டும் என்று தெளிவாக கூறுகிறது. எங்கள் அறிவைப் பொறுத்தவரை, இந்த சட்டத்தில் எந்த மாற்றமும் இருக்காது, நாங்கள் எதையும் எதிர்பார்க்க மாட்டோம். எங்களுடன் பணிபுரியும் பௌத்தம் அல்லாத அறிஞர்களும் கூட இந்ம சட்டத்தை திருத்தப்படக் கூடாது என வலியுறுத்தியுள்ளனர். ஒரு பௌத்தன் என்ற முறையில் நானும் அதே எதிர்பார்ப்புகளைப் பகிர்ந்து கொள்கிறேன். எவ்வாறாயினும், நான் அரசியலமைப்பை உருவாக்குபவர் அல்ல, அரசாங்க அதிகாரி, எனவே எதிர்வரும் அரசியலமைப்பு சீர்திருத்தங்களின் போது என்ன நடக்கும் என்பதை நாம் பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும்-என்றார்.

(அ)

# வெற்றி நிச்சயம்!

## கூறுகிறார் ஜீவன் தொண்டமான்

கொழும்பு, ஒக். 15

நுவரெலியா மாவட்டத்தில் இம்முறை சேவலின் வழியில் யானை பயணிப்பதால் வெற்றி நிச்சயம் என முன்னாள் அமைச்சரும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

நுவரெலியா மாவட்ட செயலகத்தில் ஊடகவியலாளர்களுக்கு கருத்து தெரிவிக்கையில் அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அனைத்து மலையக தலைமைகளும் இம்முறை ஒற்றுமையாக இணைந்து பாராளுமன்ற தேர்தலில் போட்டியிடுவதற்கு அழைத்தேன். அதேபோல கடந்த ஐந்து வருடங்களாக மலையகத்தில் அனைத்து கட்சி தலைமைகளும் ஒற்றுமையாக செயற்படுவதற்கு அழைப்பு விடுத்தபோதிலும் அது நடக்கவில்லை.

ஆகையால் இம்முறை நுவரெலியா மாவட்டத்தில் அவரவர் தமக்கான கட்சிகளை தெரிவு செய்து போட்டியிடுகின்றனர். இந்த நிலையில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் மூவர் இம்மாவட்டத்தில் யானைச் சின்னத்தில் போட்டியிடுகின்றனர். எம்முடன் ஐ.தே.கவை சேர்ந்த மேலும் பலர் போட்டியிடுகின்றனர்.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான அரசாங்கம் பாராளுமன்றத்தில் பெரும்பான்மையை காட்டாவிட்டால் நாட்டில் மீண்டும் பாரிய பொருளாதார சிக்கல் ஏற்படும்.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கடந்த காலங்களில் உலக நாடுகளுக்கு நிதியுதவி தொடர்பாக முன்மொழியப்பட்டி ருந்தமையினால் தற்போது புதிய அரசாங்கத்திற்கு உலக நாடுகள் நிதிகளை வழங்க முன்வந்துள்ளன.

நாட்டில் மீனவர்களுக்கும் விவசாயிகளுக்கும் நிவாரண உதவிகளை வழங்கி ஆதரவை காட்டிவரும் ஜனாதிபதி மலையக பெருந்தோட்ட தேயிலை தொழிலாளர்களுக்கு என்ன செய்துள்ளார்.

அதேநேரத்தில் நாம் தோட்டத் தொழிலாளர்களுக்கு சம்பள உயர்வை பெற்று தருவதாக வாக்குறுதி வழங்கினோம். அதேபோல இம்முறை 1350 ரூபாய் சம்பள உயர்வு தொழிலாளர்கள் கரம் கிடைத்தது . ஆகையால் மக்கள் சிந்தித்து வாக்களிக்கவேண்டும்-என்றார்.

(அ)

# நீர் கட்டணம் செலுத்தாத 41 முன்னாள் எம்.பிக்கள்

கொழும்பு, ஒக். 15

தமது உத்தியோகபூர்வ இல்லங்களுக்கான நீர்க்கட்டணங்களை முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் முன்னாள் அமைச்சர்கள் 41 பேர் இன்னும் செலுத்தவில்லை என தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபை தெரிவித்துள்ளது.

இதேவேளை பொதுவிதிகளுக்கு அமைய குறித்த 41 பேருக்கும் எதிராக எவ்வித விசேட சலுகைகளும் இன்றி சுற்றறிக்கைகளுக்கு அமைய சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமென குறிப்பிட்டுள்ளது.

மேலும் இவ்வாறு அறவிடப்படாத நீர் கட்டணங்கள், 9 மில்லியன் ரூபா நிலுவையில் உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

(அ)

# அனர்த்த நிவாரண நடவடிக்கைகளுக்கு விமானப் படையை பயன்படுத்த ஏற்பாடு

கொழும்பு, ஒக். 15

சீரற்ற காலநிலை காரணமாக அவசர நிலை ஏற்படும் பட்சத்தில் நிவாரணம் மற்றும் மீட்பு நடவடிக்கைகளுக்காக விமானப் படையினரை பயன்படுத்துவதற்கு விமானப்படை நடவடிக்கை எடுத்துள்ளது.

இதன்படி, நாட்டில் ஏதேனும் அனர்த்தங்கள் ஏற்பட்டால் தொடர்ச்சியாக கண்காணிப்பதற்காக விமானப்படையின் கண்காணிப்பு விமானங்கள் நிறுத்தப்பட்டுள்ளதுடன், மக்களுக்கு நிவாரணம் மற்றும் மீட்பு நடவடிக்கைகளுக்காக மூன்று ஹெலிகொப்டர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

இரத்மலானை விமானப் படை தளத்தில் "பெல்-412" ரக ஹெலிகொப்டர் ஒன்றும், ஹிங்குராக்கொட விமானப்படைத் தளம் மற்றும் பலாலி விமானப் படைத் தளம் ஆகியவற்றில் இருந்து இரண்டு "பெல்-212" ரக ஹெலிகொப்டர்கள் நிறுத்தப்பட்டுள்ளதாக விமானப் படை தெரிவித்துள்ளது.

மீட்புப் பணிகளுக்காக சிறப்புப் பயிற்சி பெற்ற விமானப் படைப்பிரிவின் சிறப்புப் படை வீரர்களும் அந்த முகாம்களில் தயார்படுத்தப்பட்டுள்ளனர்.

(அ)

# ஷானியின் நியமனம் குறித்து கேள்வி எழுப்பும் தேர்தல் கற்கைகள் நிறுவனம்

கொழும்பு, ஒக். 15

குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளர் ஷானி அபேசேகரவை மத்திய குற்றப் புலனாய்வுப் பகுப்பாய்வுப் பணியகத்தின் பணிப்பாளராக நியமித்தமை தொடர்பில் ஜனநாயக சீர்திருத்தங்கள் மற்றும் தேர்தல் கற்கைகள் நிறுவனம் கேள்வி எழுப்பியுள்ளது.

அபேசேகரவின் நியமனம் குறித்து அரசாங்கம் ஒக்டோபர் 10ஆம் திகதி அறிவித்தமை குறித்து ஜனநாயக சீர்திருத்தங்கள் மற்றும் தேர்தல் கற்கைகள் நிறுவன நிறைவேற்றுப் பணிப்பாளர் மஞ்சுள கஜநாயக்க கேள்வி எழுப்பியுள்ளார்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி அனுரகுமார திஸாநாயக்கவின் தேசிய மக்கள் சக்திக்காக தீவிரமாக பிரசாரம் செய்த ஓய்வு பெற்ற பொலிஸ் உத்தியோகத்தர்களின் குழுவில் அபேசேகர இணைந்திருந்தார் என கஜநாயக்க சுட்டிக்காட்டினார்.

பாராளுமன்றத் தேர்தல் அறிவிக்கப்பட்டதன் பின்னரே அபேசேகர நியமிக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் கூறினார்.

அபேசேகர சேவையில் இருக்கும்போது திறமையான அதிகாரியாக கருதப்பட்டாலும், பொதுத் தேர்தல் முடிந்து புதிய பாராளுமன்றத்தின் முதல் அமர்வின் பின்னரே அவரது நியமனம் அறிவிக்கப்பட்டிருக்கவேண்டும் என்றும் கஜநாயக்க வலியுறுத்தியுள்ளார்.

(அ)

# திசைகாட்டி, சிலிண்டர் என்னை ஏற்கவில்லை!

## கூறுகின்றார் சரத் பொன்சேகா

கொழும்பு, ஒக். 15

தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திசாநாயக்க மற்றும் முன்னாள் பிரதமர் தினேஸ் குணவர்தன ஆகியோர் பொதுத் தேர்தலில் தமது கட்சிகளில் போட்டியிட வாய்ப்பு வழங்க முடியாது என தெரிவித்தனர் என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

இதன் காரணமாகவே இம்முறை பொதுத்தேர்தலில் தான் போட்டியிடுவதில்லை என முடிவு செய்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இந்த வருட பொதுத் தேர்தலில் திசைகாட்டி மற்றும் எரிவாயு சிலிண்டர் சின்னத்தில் போட்டியிடுவதற்கான பேச்சுவார்த்தை தோல்வியடைந்ததன் காரணமாக இந்த தீர்மானத்தை எடுத்ததாக பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா மேலும் கூறினார்.

(அ)

# வெளிநாட்டுப் பண அனுப்பல் சதவீதம் இவ்வருடம் அதிகரிப்பு

கொழும்பு, ஒக். 15

இந்த வருடத்தின் முதல் 9 மாதங்களில் வெளிநாட்டுப் பண அனுப்பல் 4.83 பில்லியன் அமெரிக்க டொலராக பதிவாகியுள்ளது.

இது கடந்த வருடத்தின் முதல் ஒன்பது மாதங்களுடன் ஒப்பிடும் போது 11.5 சதவீத அதிகரிப்பாகும். அதன்படி கடந்த செப்ரெம்பர் மாதம் வெளிநாட்டு பண அனுப்பல் 555.6 மில்லியன் அமெரிக்க டொலராக பதிவாகி யுள்ளதுடன், அது ஆண்டுக்கு ஆண்டு அடிப்படையில், 15.2 சதவீத அதிகரிப்பாகும்.

எனினும் கடந்த ஓகஸ்ட் மாதத்தில் பதிவான வெளிநாட்டுப் பண அனுப்பல் 577.5 மில்லியன் அமெரிக்க டொலராக காணப்பட்டது.

(அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாக்காளர் பட்டியல் இறுவட்டாக வருகிறது

## தேர்தல் ஆணைக்குழு நடவடிக்கை

கொழும்பு, ஒக். 15

**2024 ஆம் ஆண்டுக்கான பொதுத்தேர்தல் வாக்காளர் பட்டியலை இறுவட்டாக வெளியிட தேர்தல் ஆணைக்குழு நடவடிக்கை எடுத்துள்ளது.**

2024 பொதுத்தேர்தலில் போட்டியிடும் அனைத்து வேட்பாளர்களினாலும் இந்த இறுவட்டினை பெற்றுக் கொள்ள முடியுமென ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

பொதுத்தேர்தலில் போட்டியிடும் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியின் செயலாளரினால், அதிகாரமிக்க பிரதிநிதியினால், சுயேச்சைக் குழுவின் தலைவரினால் அல்லது வேட்பாளரின் எழுத்துமூல கோரிக்கையின் அடிப்படையில் இறுவட்டை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் ஆணைக்குழு கூறியுள்ளது.

வார நாட்களில் உரிய கட்டணத்தை செலுத்தி பிரதான அலுவலகத்தில் அல்லது மாவட்ட தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலகத்தில் 2024 ஆம் ஆண்டுக்கான வாக்காளர் பட்டியலை இறுவட்டாக பெற்றுக் கொள்ள முடியுமென தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (அ)

# ஏப்ரல் மாதத்துக்குள் மக்கள் மீண்டும் ரணிலைக் கேட்பர்!

## கூறுகின்றார் ராஜித சேனாரத்ன

கொழும்பு, ஒக். 15



ஏற்கனவே ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் தேசிய மக்கள் சக்தி போன்றவற்றில் பல்வேறு நெருக்கடிகள் ஏற்பட்டுள்ளதாக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

இந்த அரசாங்கத்தால் சலிப்படைந்த மக்கள் மீண்டும் ரணிலைக் கேட்பார்கள் என்றும் அவர் குறிப்பிட்டார்.

புதிய ஜனநாயக முன்னணியின் கட்சி உறுப்பினர்களின் கூட்டத்தின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே ராஜித சேனாரத்ன மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஐக்கிய மக்கள் சக்தி கட்சித் தலைமை கடும் அதிருப்தியில் உள்ளது. திசைகாட்டியிலும் நெருக்கடிகள் உள்ளன. வரும் ஏப்ரல் மாதத்திற்குள், இந்த நெருக்கடி முடிவுக்கு வரும். இந்த அரசாங்கத்தால் சலிப்படைந்த மக்கள் மீண்டும் ரணிலைக் கேட்பார்கள்-என்றார். (அ)

## முட்டை விலையின் மீண்டும் அதிகரிப்பு

கொழும்பு, ஒக். 15

அண்மையில் முட்டை ஒன்றின் விலை குறைக்கப்பட்ட போதிலும், நாடளாவிய ரீதியில் பல இடங்களில் அந்த விலையில் முட்டைகளைக் கொள்வனவு செய்ய முடியாதுள்ளதாக நுகர்வோர் தெரிவிக்கின்றனர்.

தற்போது மீண்டும் முட்டை விலை 45 ரூபாயை கடந்துள்ளது. சந்தையில் 28 முதல் 32 ரூபாய் வரையில் இருந்த முட்டையின் விலை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாக சந்தை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

முட்டை உற்பத்தி குறைவினால் முட்டையின் விலை அதிகரித்துள்ளதாக மேலும் தெரிவிக்கப்படுகின்றது. இந்நிலையில் தற்போதைய நிலவரத்தால் முட்டையின் விலை அடுத்த சில நாட்களில் மேலும் அதிகரிக்கலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# பழைய அரசியல் கலாசாரத்தையே புதிய அரசாங்கமும் பின்பற்றுகிறது

## மக்கள் போராட்டக் கூட்டணி குற்றச்சாட்டு

கொழும்பு, ஒக். 15

புலனாய்வுப் பகுப்பாய்வுப் பிரிவின் புதிய பணிப்பாளராக ஓய்வுபெற்ற காவல்துறை அத்தியட்சகர் ஷானி அபேசேகர நியமிக்கப்பட்டமையானது பழைய அரசியல் கலாசாரத்தைப் பிரதிபலிப்பதாக மக்கள் போராட்டக் கூட்டணியின் வேட்பாளர் நுவன் போபகே தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் தேசிய மக்கள் சக்தியின் பிரசார மேடைகளில் ஷானி அபேசேகர, அந்த கட்சிக்குச் சார்பாகப் பிரசாரங்களை மேற்கொண்டிருந்தார்.

தற்போது தங்களுக்கு ஆதரவாகச் செயற்பட்ட ஓய்வுபெற்ற அதிகாரியான அவருக்கு புதிய அரசாங்கத்தில் இவ்வாறான உயர் பதவி வழங்கப்பட்டுள்ளது.

தங்களுக்கு நெருக்கமானவர்களுக்கு பதவிகளை வழங்குவதனையே கடந்த அரசாங்கங்களும் செய்துவந்தன. இதனை ஒழிக்கவேண்டும் என்றே தேசிய மக்கள் சக்தியும் பிரசாரம் செய்து வந்தது. தற்போது, தங்களுக்கு ஆதரவு வழங்கிய ஓய்வு பெற்ற அதிகாரியான ஷானி அபேசேகரவுக்கு பதவியை வழங்கியதன் மூலம் தற்போதைய அரசாங்கமும் அதே பழைய கலாசாரத்தை பிரதிபலிக்கிறது. அதேநேரம், 7 சர்ச்சைக்குரிய சம்பவங்கள் தொடர்பிலான விசாரணைகளை விரைவுபடுத்துமாறு புதிய அரசாங்கம் உத்தரவிட்டுள்ளது.

கடந்த நல்லாட்சி அரசாங்கமும் ஊழல்வாதிகளை கைது செய்வதாக கூறியதே தவிர அவ்வாறு எதனையும் செய்யவில்லை.

இவை தேர்தல் காலங்களில் கண்துடைப்புக்காக காட்டப்படும் நாடகங்கள். தேர்தல் முடிந்தவுடன் இந்த விசாரணைகள் மீண்டும் கிடப்பில் போடப்படும்-என்றார். (அ)

## பிரதான ரயில் சேவை தாமதம்

கொழும்பு, ஒக். 15

மஹவயில் இருந்து கொழும்பு கோட்டை நோக்கிப் பயணிக்கும் விரைவு ரயிலில் நேற்று தொழில்நுட்பக் கோளாறு ஏற்பட்டது.

இதன் காரணமாக பிரதான ரயில் சேவையில் தாமதம் ஏற்பட்டதாக ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

திம்பிரியகெதர நிலையத்துக்கு அருகில் ரயில் தொழில்நுட்பக் கோளாறுக்கு உள்ளாகியுள்ளதுடன், மோசமான வானிலை காரணமாக ரயிலை இயக்குவதில் சில தாமதங்கள் ஏற்படக்கூடும் என ரயில்வே திணைக்களம் தெரிவித்தது. (அ)

# பொருளாதார நிவாரணங்களை அதிகரிக்க ஐ.எம்.எவ். இணக்கம்!

## ஜனாதிபதியின் பொருளாதார ஆலோசகர்

கொழும்பு, ஒக். 15

இலங்கையில் மக்களுக்கு வழங்கப்பட்டுவரும் பொருளாதார நிவாரணங்களை மேலும் அதிகரிப்பதற்கு சர்வதேச நாணய நிதியம் இணங்கியுள்ளது என ஜனாதிபதியின் பொருளாதார மற்றும் நிதி ஆலோசகர் பேராசிரியர் அனில் ஜயந்த தெரிவித்தார்.

மக்களுக்கு நிவாரணங்களை வழங்குவது குறித்த யோசனைகளை விரைவில் சர்வதேச நாணய நிதியத்திடம் சமர்ப்பிப்போம் என அவர் கூறினார்.

பொதுமக்களுக்கு வழங்கப்பட்டுள்ள ஆதரவை உதவிகளை மேலும் வலுப்படுத்துவது குறித்தே தற்போதைய அரசாங்கம் முக்கியமாக கவனம் செலுத்துகின்றது என அவர் குறிப்பிட்டார்.

சர்வதேச நாணய நிதியத்துடனான பேச்சுக்களின்போது பொருளாதார மீட்சியை மேலும் விரைவுபடுத்துவதற்கு பொதுமக்களின் அத்தியாவசிய தேவைகளை பூர்த்தி செய்வது அவசியம் என நாங்கள் வலியுறுத்தினோம் என ஜனாதிபதியின் ஆலோசகர் தெரிவித்தார்.

நிவாரணங்களை வழங்குவதை சர்வதேச நாணய நிதியம் எதிர்க்கவில்லை.எங்கள் திட்டங்களை முன்வைக்குமாறு கேட்டுக் கொண்டது என அவர் கூறினார்.

பொதுமக்களுக்கான உதவிகளை வழங்குவதை துரிதப்படுத்துவதற்காக சர்வதேச நாணய நிதியத்துடன் இணைந்த அமைப்புகளுடன் சேர்ந்து அரசாங்கம் செயற்படுகின்றது. கூடிய விரைவில் நிவாரணங்கள் மக்களை போய்ச் சேருவதை உறுதி செய்வது குறித்து நாங்கள் அர்ப்பணிப்புடன் உள்ளோம் எனவும் அவர் குறிப்பிட்டார். (அ)

# கூரிய ஆயுதங்களை வைத்திருந்த நான்கு பேர் பொலிஸாரால் கைது!

கொழும்பு, ஒக். 15

இரத்மலானை பெலக்கடை சந்தி பகுதியில் கூரிய ஆயுதங்களுடன் நபரொருவரை கொல்லச் சென்ற நால்வர் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அந்த சந்தேக நபர்கள் வைத்திருந்த ஏழு வாள்கள் மற்றும் ஐஸ் போதைப்பொருள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன.

கல்கிசை நீதவான் நீதிமன்றத்திற்கு அருகில் நபர் ஒருவரை வெட்டிக் கொல்லத் தயாராக காரில் சிலர் வருவதாக கிடைத்த இரகசியத் தகவலையடுத்து, உடனடியாகச் செயற்பட்ட இலஞ்ச ஒழிப்புப் பிரிவு அதிகாரிகள் சந்தேக நபர்களைக் கைது செய்தனர்.

சந்தேக நபர்களிடம் நடத்தப்பட்ட விசாரணையில், இந்த சந்தேக நபர்களுக்கு எதிரான வழக்கில் பாதிக்கப்பட்டவர் சில மாதங்களுக்கு முன்பு இணையத்தள அப்ளிகேஷன் மூலம் ஒருவருடன் நட்பாக பழகி அந்த நபரை மலையகத்துக்கு அழைத்து வந்த நபரை கொலை செய்ய இருப்பது தெரியவந்தது.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் இரத்மலானை சொய்சா புர மற்றும் பைவத்த பகுதியை சேர்ந்தவர்கள். (அ)

# நட்டத்தில் இயங்கிவரும் அரசின் நிறுவனங்களை என்ன செய்வது?

## பொதுத் தேர்தலின் பின்னரே தீர்மானம்

கொழும்பு, ஒக். 15

நட்டத்தில் இயங்கும் அனைத்து அரச நிறுவனங்களையும் மறுசீரமைப்பு செய்வது குறித்த பொதுத்தேர்தலின் பின்னரே அரசாங்கம் தீர்மானிக்கும் என அரசாங்க வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

சிறிலங்கன் எயார்லைன்ஸ் உட்பட நட்டத்தில் இயங்கும் அரச நிறுவனங்களை மறுசீரமைப்பது மற்றும் மத்தல விமான நிலையத்தை வேறு நிர்வாகத்திடம் கையளிப்பது போன்ற முடிவுகளை பொதுத்தேர்தலின் பின்னரே அரசாங்கம் எடுக்கவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

முன்னைய அரசாங்கம் அரச நிறுவனங்களை மறுசீரமைப்பதற்கான பிரிவொன்றை உருவாக்கியிருந்தது.

எனினும் அனுரகுமார திஸாநாயக்க ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டதும் இந்த பிரிவை சேர்ந்தவர்கள் தங்கள் பதவிகளை இராஜினாமா செய்தனர்.

முன்னைய அரசாங்கம் உருவாக்கிய அரச நிறுவனங்களை மறுசீரமைப்பதற்கான பிரிவை கைவிடுவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளமை குறித்த கேள்விக்கு அரசாங்கத்தின் உயர் அதிகாரியொருவர் பொதுத்தேர்தலின் பின்னரே நட்டத்தில் இயங்கும் அரச நிறுவனங்களை மறுசீரமைப்பது குறித்த தீர்மானங்களை எடுக்கவுள்ளதாக தெரிவித்துள்ளார்.

சிறிலங்கன் எயார்லைன்ஸை விற்கமாட்டோம் என தெரிவித்துள்ள அவர், அரசாங்கம் புதிதாக நியமித்துள்ள முகாமைத்துவக் குழுவுடன் கலந்தாலோசித்த பின்னர் புதிய அபிவிருத்தித் திட்டமொன்றை முன்னெடுக்கவுள்ளதாக குறிப்பிட்டார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெள்ளக்காடானது அம்பாறை வீதிகளில் பயணிப்போர் அவதி





கல்முனை, ஒக். 15

**அம்பாறையில் கடும் காற்றுடன் கூடிய மழை காரணமாக பொதுமக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர். சில இடங்களில் மழை குறைந்துள்ளபோதும் காற்றுடன் கூடிய காலநிலை நீடிப்பதால் மக்களது அன்றாட வாழ்க்கை முற்றாக பாதிக்கப்பட்டுள்ளது.**

குறிப்பாக நாவிதன்வெளி, கல்முனை முஸ்லிம் பிரிவு, தமிழ் உப பிரதேச செயலகங்களுக்கு உட்பட்ட பிரதான போக்குவரத்து வீதிகள் வெள்ளக்காடாக காட்சியளிக்கின்றன. தூர இடங்களுக்கு செல்லும் அனைத்து போக்குவரத்துக்களும் தடைப்பட்டுள்ளதோடு உள்ளூர் வீதிகள் அனைத்திலும் நீர் நிரம்பி வழிகின்றது.

ஞாயிற்றுக்கிழமையும் நேற்றும் திடீரென ஏற்பட்ட கொட்டித்தீர்த்த கனமழை காரணமாக கல்முனை மாநகர சபைக்குட்பட்ட பாண்டிருப்பு, கல்முனை, சாய்ந்தமருது, மருதமுனை, நற்பிட்டிமுனை பிரதேச பிரதான வீதிகளில் நீர் நிரம்பியுள்ளதுடன் வாகனச் சாரதிகள், பாதசாரிகள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர்.

மேலும், மழை காரணமாக வீடுகள், வர்த்தக நிலையங்களுக்குள் வெள்ள நீர் உட்புகுந்துள்ளதுடன் அவற்றை வெளியேற்றும் முயற்சியில் மக்கள் ஈடுபட்டுள்ளனர். பகல் நேரத்தில் பயணிக்கும் வாகனங்களின் முன்விளக்குகளும் ஒளிரச் செய்யப்பட்டு பயணிப்பதையும் அவதானிக்க முடிந்தது.
அம்பாறை மாவட்டத்தில் திடீரென மழை பெய்து வருவதுடன் வீதிகள் குடியிருப்புகள் என பல இடங்களும் வெள்ளத்தால் சூழப்பட்டுள்ளது.

சில வீதிகளில் வடிகான்களுக்கு மேலாக மழை நீர் பரவுவதால் வீடுகளுக்குள் வெள்ள நீர் உட் செல்லும் நிலை ஏற்பட்டுள்ளதுடன் அதனை தடுப்பதற்கான நடவடிக்கையில் மக்கள் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த நிலையில் வடிகான்களை விரைந்து சீர்செய்யுமாறு கல்முனை மாநகர சபையிடம் பொது மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (எ)

# ஆட்சியமைக்கும் அரசுடன் பேரம் பேசி செயல்படுவோம்

## ஈழ மக்கள் ஜனநாயக கட்சி

மட்டக்களப்பு, ஒக். 15

வடக்கு - கிழக்கில் ஈழ மக்கள் ஜனநாயக கட்சி கணிசமான ஆசனங்களை பெற்றுக்கொண்டு ஆட்சியமைக்கின்ற அரசாங்கத்துடன் பேரம் பேசி செயல்படுவோம். எனவே, வீணைச் சின்னத்தில் போட்டியிடும் எங்களுக்கு வாக்களித்து எங்களை வெற்றிபெறச் செய்ய வேண்டும் என்று மட்டக்களப்பு மக்களிடம் அந்தக் கட்சியின் மாவட்ட அமைப்பாளர் சிவானந்தராசா கோரிக்கை விடுத்துள்ளார்.

மட்டக்களப்பில் உள்ள ஈ. பி. டி. பி. காரியாலயத்தில் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களை அறிமுகம் செய்தலும் ஊடக சந்திப்பும் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றபோது அவர் இவ்வாறு குறிப்பிட்டார். (எ)

# மாவடிமுன்மாரியில் விவசாயிகளுக்கு களப்பாடசாலையின் அறுவடை விழா

மட்டக்களப்பு, ஒக். 15

மட்டக்களப்பு மாவட்ட விவசாயத் திணைக்களத்தின் கீழுள்ள மண்முனை தென் மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் கொக்கட்டிச்சோலை விவசாய விரிவாக்கத் நிலையத்துக்குட்பட்ட மாவடிமுன்மாரி விவசாயப் போதனாசிரியர் பிரிவில் சேதன முறையிலான வீட்டுத்தோட்ட களப்பாடசாலை நிகழ்வின் அறுவடை விழா சனிக்கிழமை நடைபெற்றது. (எ)



# சீரடி சாய் பாபாவின் 106ஆவது சமாதி தினம்



திருக்கோவில், ஒக். 14

சீரடி சாய் பாபாவின்106ஆவது மகா சமாதி தின அபிஷேகம் சனிக்கிழமை திருக்கோவிலில் நடைபெற்றது.

திருக்கோவில் தாமரைக்குளத்தில் அமைந்துள்ள சீரடி சாய் கருணாலயத்தில் காலை முதல் சாயி பூஜை நடை பெற்றது. (எ)

# கேதார கௌரி விரதம் ஆரம்பம்



மட்டக்களப்பு, ஒக். 15

மட்டக்களப்பு, கொத்துக்குளம் அருள்மிகு சிறீ முத்துமாரியம்மன் ஆலயத்தில் கேதார கௌரி விரத பூஜை ஆரம்பமானது. இதில் நூற்றுக்கணக்கான அடியவர்கள் கலந்து கொண்டனர். (எ)



# இலவச கண் பரிசோதனையும் மூக்கு கண்ணாடி வழங்கலும்

திருகோணமலை, ஒக். 15

சமூக சேவை அடிப்படையில் சனல் கண் ஒப்டிகல் நிறுவனத்தால் நடத்தப்பட்ட இலவச கண் பரிசோதனையும், மூக்குக் கண்ணாடி வழங்கலும் நேற்று கோபாலபுரம் மாவட்ட சித்த ஆயுள்வேத மருத்துவமனையில் நடைபெற்றது.

கோபாலபுரம், நிலாவெளி, இறக்கக்கண்டி, குச்சவெளி போன்ற பிரதேசங்களில் இருந்து நூற்றுக்கு மேற்பட்டவர்கள் வருகை தந்து, தங்களின் கண்களை பரிசோதனை செய்து, அவர்களின் கண் குறைபாடுகளுக்கு ஏற்ப கண்ணாடிகளை பெற்றுச் சென்றனர். (எ)

# முதியோர் தினத்தை முன்னிட்டு சிரேஷ்ட பிரஜைகள் கௌரவிப்பு



திருக்கோவில், ஒக். 15

சர்வதேச முதியோர் மற்றும் சிறுவர் தினத்தை முன்னிட்டு திருக்கோவில் பிரதேச காயத்ரி மற்றும் மண்டானை கிராமங்களில் இருந்து தெரிவு செய்யப்பட்ட சிரேஷ்ட பிரஜைகள் 20 பேர் பரிசு வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

திருக்கோவில் சமூக தரிசன நிறுவன ஏற்பாட்டில் அந்த நிறுவன ஸ்தாபகத் தலைவர் பி. நந்தபாலு தலைமையில் காயத்ரி கிராம சமூக தரிசன நிறுவன கேட்போர் கூடத்தில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

ஆன்மீக விருந்தினராக சிவ சிறீ கிருபாகரக் குருக்கள், திருநாவுக்கரசு நாயனார் குருகுலப் பணிப்பாளர் கண. இராஜரெத்தினம்( கண்ணன்) ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

கௌரவ விருந்தினர்களாக காரைதீவு பிரதேச சபை முன்னாள் தவிசாளர் கிருஷ்ண பிள்ளை ஜெயசிறில், பொத்துவில் உப தவிசாளர் பெருமாள் பார்த்திபன், ஓய்வு நிலை உதவிக் கல்விப் பணிப்பாளர் வி. ரி. சகாதேவராஜா ஆகியோர் கலந்து சிறப்பித்தனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயிர்காக்கும் மருந்துகளுக்கு பாகிஸ்தானில் பற்றாக்குறை

## 100 குழந்தைகள் உயிரிழப்பு!

கராச்சி, ஒக். 15

**உயிர்காக்கும் மருந்துகளுக்கு பெரும் பற்றாக்குறை நிலவுவதால் பாகிஸ்தானில் டிப்தீரியா நோய்க்கு 100இற்கும் மேற்பட்ட குழந்தைகள் உயிரிழந்தன என்று அதிர்ச்சித் தகவல் வெளியாகியுள்ளது.**

டிப்தீரியா எனும் கொடிய நோய் 'காரிணி பக்ரீரியம் டிப்தீரியே' என்ற வகை பக்ரீரியாக்களால் பரவுகிறது.

இந்தக் கிருமிகள் தொண்டையை பாதித்து சுவாசத்தையும் உணவு விழுங்குவதையும் தடுப்பதால் இது தொண்டை அடைப்பான் என அழைக்கப்படுகிறது. நோய் எதிர்ப்பு சக்தி குறைந்தவர்களுக்கு இந்த பக்ரீரியா தொற்று எளிதில் ஏற்படும். பெரும்பாலும் 16 வயதுக்குட்பட்ட சிறுவர்களையும், வயோதிபர்களையும் இது பாதிக்கும். டிப்தீரியாவை குணப்படுத்த "டிப்தீரியா அன்ட்டி - டாக்சின்" எனும் உயிர்காக்கும் மருந்து பயன்படுத்தப்படுகிறது. இந்த நிலையில் இந்த மருந்து பற்றாக்குறை காரணமாக பாகிஸ்தானின் கராச்சி நகரில் இந்த ஆண்டு 100இற்கும் மேற்பட்ட குழந்தைகள் உயிரிழந்ததாக தகவல் வெளியாகியுள்ளது.

இதனை சிந்து மாகாண சுகாதார அதிகாரிகள் உறுதி செய்தனர். "சிந்து தொற்று நோய் மருத்துவமனையில் கடந்த ஆண்டு 140 டிப்தீரியா நோயாளிகள் சேர்க்கப்பட்டனர். இவர்களில் 52 பேர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தனர்" என்று அதிகாரிகள் கூறினர். (எ)

# திடீரென தீக்கிரையான படகு இந்தோனேசியாவில் சோகம்



ஜகார்த்தா, ஒக். 15

இந்தோனேசியாவில் பயணிகளுடன் சென்று கொண்டிருந்த படகு திடீரென தீக்கிரையானதில் ஐவர் பலியாகினர்.

இந்தோனேசியாவின் வடக்கு மலுகு தீவில் பெனி லவோஸ் மாகாணத்தில் தேர்தல் நடைபெறவுள்ளது. வேட்பாளரான பென்னி என்பவர் தனது ஆதரவாளர்களுடன் அங்குள்ள பகுதிகளுக்கு படகில் சென்று பிரசாரம் மேற்கொண்டிருந்தார். அப்போது எதிர்பாராதவிதமாக அந்த படகில் தீப்பிடித்தது.

காற்றின் வேகம் காரணமாக படகு முழுவதும் மளமளவென தீ பரவி எரியத் தொடங்கியது. சிறிது நேரத்தில் படகு தீக்கிரையாகி சாம்பலானது. இந்த விபத்தில் படகில் இருந்த ஐவர் உடல் கருகி சம்பவ இடத்திலேயே பலியாகினர். 9 பேர் படுகாயமடைந்தனர். (எ)



# பிரேசிலை தாக்கிய சக்திவாய்ந்த புயல்

பிரேசிலா, ஒக். 15

பிரேசிலில் சக்திவாய்ந்த புயல் தாக்கியதில் 7 பேர் உயிரிழந்தனர்.

தென் அமெரிக்காவில் அமைந்துள்ள நாடு பிரேசில். அந்த நாட்டின் சவ் பலோ மாகாணத்தை சக்திவாய்ந்த புயல் தாக்கியது.

கனமழையுடன் மணிக்கு 108 கிலோ மீற்றர் வேகத்தில் புயல் காற்று வீசியது. இதனால், நகரின் பல்வேறு பகுதிகளில் மின்கம்பங்கள், மரங்கள் சாய்ந்தன. புயலால் சவ் பலோ மாகாணத்தின் பெரும்பாலான பகுதிகளில் மின் விநியோகம் தடைப்பட்டது. 10 இலட்சத்துக்கும் மேற்பட்ட வீடுகள் மின்சாரமின்றி இருளில் மூழ்கின.

இந்த நிலையில், பிரேசிலை தாக்கிய புயலில் சிக்கி 7 பேர் உயிரிழந்ததாக அரசு தெரிவித்துள்ளது. மேலும், பலர் படுகாயமடைந்துள்ளனர். புயலின் தாக்கம் தீவிரமாக உள்ள நிலையில் மீட்புப்பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன. (எ)

# புவி ஈர்ப்பு விசையை மீறி மீண்டும் ஏவுதளத்துக்கு திரும்பிய ரொக்கெட்

## ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனம் சாதனை

நியூயோர்க், ஒக். 15

உலகில் முதல் முறையாக விண்ணில் செலுத்திய ஸ்டார்ஷிப் ரொக்கெட் புவி ஈர்ப்பு விசையை மீறி மீண்டும் பத்திரமாக ஏவுதளத்துக்கே திரும்பியது.

எலான் மஸ்க்கின் ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனம், விரைவில் ஸ்டார்ஷிப் ரொக்கெட் மூலம் மனிதர்களை விண்ணுக்கு அனுப்பத் திட்டமிட்டுள்ளது. இதற்காக அந்த ரொக்கெட்டை தொடர்ந்து சோதித்து வருகிறது. விண்வெளிக்கு அனுப்பிவிட்டு பூமிக்கு கொண்டு வந்து மீண்டும் பயன்படுத்தக்கூடிய வகையில் இந்த ரொக்கெட் வடிவமைக்கப்பட்டுள்ளது. அந்த வகையில் கடந்த 4 முறை நடத்தப்பட்ட சோதனைகளின் போது ரொக்கெட்டின் 2ஆம் நிலையான பூஸ்டர் பூமியில் தரையிறங்குவதற்கு முன்பே நடுவானில் வெடித்து சிதறியது.

இந்த நிலையில் ஸ்டார்ஷிப் ரொக்கெட்டின் பூஸ்டரை பத்திரமாக தரையிறக்கும் நோக்கத்துடன் 5ஆவது முறையாக அந்த ரொக்கெட் சோதிக்கப்பட்டது.



அமெரிக்காவின் டெக்சாஸ் மாகாணத்தில் உள்ள ஏவுதளத்தில் இருந்து, ஆட்கள் யாருமின்றி வெற்று விண்கலத்துடன் ஸ்டார்ஷிப் ரொக்கெட் விண்ணில் செலுத்தப்பட்டது. சற்று நேரத்துக்கு பிறகு ரொக்கெட் இரண்டாக பிரிந்து பூஸ்டர் பகுதி பூமியை நோக்கி செங்குத்தாக கீழே இறங்கத் தொடங்கியது. எப்படி புறப்பட்டு சென்றதோ அதுபோலவே நெருப்பை கக்கியபடி மெல்ல மெல்ல கீழே இறங்கியது.

இறுதியில் ரொக்கெட் செலுத்தும் கோபுரத்தில் பொருத்தப்பட்டிருந்த உலோக கரங்கள் பூஸ்டர் பகுதியை பிடித்தது. அதாவது, புவி ஈர்ப்பு விசையை மீறி மீண்டும் ஏவுதளத்துக்கே ரொக்கெட் திரும்பியது. இதன் மூலம் உலகில் முதல் முறையாக ரொக்கெட்டின் பூஸ்டர் பகுதியை வெற்றிகரமாக தரையிறக்கி ஸ்பேக்ஸ் நிறுவனம் சாதனை படைத்துள்ளது. இந்த சாதனையை ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனத்தினர் கொண்டாடி மகிழ்ந்தனர். உலகின் முதன் நிலை பணக்காரரான எலான் மஸ்க்கும் இதன் வீடியோ காட்சிகளை தனது எக்ஸ் தளத்தில் பகிர்ந்துள்ளார். (எ)

# லெபனானில் ஐ. நா. அமைதிப்படை தளத்துக்குள் இஸ்ரேல் படையினர்

பெய்ரூட், ஒக். 15

லெபனானில் உள்ள ஐக்கிய நாடுகள் அமைதிப்படையின் தளத்துக்குள் இஸ்ரேலிய படையினர் பலவந்தமாக நுழைந்தனர் என ஐ. நா. குற்றஞ்சாட்டியுள்ளது.

ஐக்கிய நாடுகள் அமைதிப் படையின் தளத்தின் பிரதான வாயிலின் இஸ்ரேலின் இரண்டு ராங்கிகள் தாக்கிச் சேதப்படுத்தின என்று ஐ. நா. தெரிவித்துள்ளது.

இந்தத் தாக்குதலில் அமைதிப்படையைச் சேர்ந்த 15 பேர் காயமடைந்தனர்.

இஸ்ரேல் - லெபான் எல்லையிலுள்ள ஐ. நா. அமைதிப்படையின் முகாமின் பிரதான வாயிலை இஸ்ரேலிய ராங்கிகள் அழித்த பின்னர் உள்ளே நுழைந்தன என்று லெபனானுக்கான ஐ. நாவின் இடைக்கால அறிக்கை தெரிவித்துள்ளது. (எ)

# ஹிஸ்புல்லா தாக்குதலில் இஸ்ரேல் படையினர் பலி

## 'போருக்குத் தயார்' ஈரான் அறிவிப்பு

டெல் அவிவ், ஒக். 15

ஹிஸ்புல்லாக்கள் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடத்திய ட்ரோன் தாக்குதலில் இஸ்ரேல் படையினர் நால்வர் உயிரிழந்ததாக அந்த நாட்டு பாதுகாப்பு அமைச்சு உறுதிப்படுத்தியுள்ளது.

மத்திய கிழக்கு பகுதியில் உள்ள இஸ்ரேல், பலஸ்தீனம் இடையே மோதல் நீடிக்கிறது.

இந்த நிலையில், ஹிஸ்புல்லாக்கள் மத்திய இஸ்ரேலில் உள்ள இராணுவத் தளத்தை குறிவைத்து நடத்திய ட்ரோன் தாக்குதலில் நால்வர் இறந்ததாகவும், 7 பேர் படுகாயமடைந்ததாகவும் இஸ்ரேல் பாதுகாப்பு அமைச்சு உறுதிப்படுத்தியுள்ளது. இந்த ட்ரோன் தாக்குதலில் 61 பேர் காயமடைந்ததாக இஸ்ரேலின் தேசிய மீட்புக் குழுக்கள் தெரிவித்த நிலையில், இராணுவத்தினரின் உயிரிழப்பை பாதுகாப்பு அமைச்சு உறுதி செய்துள்ளது.

இதற்கிடையில் 'போருக்குத் தயார்' என்று ஈரான் அறிவித்துள்ளது மத்திய கிழக்கு பிராந்தியத்தில் போர்ப் பதற்றத்தை பலமடங்கு அதிகரித்துள்ளது. (எ)

# முடிவுக்கு வந்தது ஜனாதிபதி ஆட்சி

புதுடில்லி, ஒக். 15

இந்தியாவின் ஜம்மு காஷ்மீரில் ஜனாதிபதி ஆட்சி முடிவுக்கு வந்தது. இது குறித்து மத்திய உள்துறை அமைச்சு வெளியிட்ட அறிக்கையில், "2019ஆம் ஆண்டின் ஜம்மு காஷ்மீர் மறுகட்டமைப்பு சட்டத்தின் 73ஆவது பிரிவின் அதிகாரத்தைப் பயன்படுத்தி குடியரசுத் தலைவர் - ஜனாதிபதி ஆட்சி திரும்பப் பெறப்பட்டுள்ளது"எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காஷ்மீரில் ஆட்சி அமைக்க தேசிய மாநாட்டுக் கட்சியின் துணைத் தலைவர் உமர் அப்துல்லா துணை நிலை ஆளுநர் மனோஜ் சின்ஹாவை சந்தித்து உரிமை கோரிய நிலையில் இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5 விக்கெட் வித்தியாசத்தில் மே.இ.தீவுகள் அணி வெற்றி

## சொந்த மண்ணில் இலங்கை அணி ஏமாற்றம்

தம்புள்ளை, ஒக். 15

இலங்கை - மேற்கு இந்திய தீவுகள் அணிகளுக்கு இடையிலான முதலாவது ரி - 20 போட்டியில் மேற்கு இந்திய தீவுகள் அணி 5 விக்கெட்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இலங்கைக்கு வந்துள்ள மேற்கு இந்திய தீவுகள் கிரிக்கெட் அணி, மூன்று ரி - 20 மற்றும் 3 ஒருநாள் போட்டிகளில் விளையாடுகிறது. இதில் முதலாவது ரி - 20 போட்டி தம்புள்ளையில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை 20 ஓவர்கள் முடிவில் 7 விக்கெட்கள் இழப்புக்கு 179 ஓட்டங்கள் எடுத்தது. அதிகபட்சமாக அணித் தலைவர் சரித் அசலங்க 59 ஓட்டங்கள் எடுத்தார்.

இதையடுத்து 180 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய மேற்கு இந்திய தீவுகள் அணி, 19.1 ஓவர்களில் 5 விக்கெட்கள் மட்டும் இழந்து இலக்கை கடந்து வெற்றி பெற்றது. தொடக்க துடுப்பாட்ட வீரர் பிரண்டன் கிங் அதிரடியாக விளையாடி



63 ஓட்டங்கள் பெற்றார். இந்த வெற்றியின் மூலம் 3 போட்டிகள் கொண்ட ரி - 20 தொடரில் 1 - 0 என்ற கணக்கில் மேற்கு இந்திய தீவுகள் அணி முன்னிலை பெற்றது. (எ)



## ஷங்காய் மாஸ்டர்ஸ் ரென்னிஸ் சம்பியனானார் ஜன்னிக் சினெர்

ஷங்காய், ஒக். 15

ஷங்காய் மாஸ்டர்ஸ் ரென்னிஸ் தொடரின் இறுதிப் போட்டியில் வெற்றி பெற்று சம்பியனானார் ஜன்னிக் சினெர்.

இந்த சர்வதேச ரென்னிஸ் போட்டி சீனாவில் நடைபெற்று வந்தது.

இதன் இறுதிப் போட்டியில் செர்பிய வீரர் நோவக் ஜோகோவிச்சை 7 - 6 (4), 6 - 3 என்ற புள்ளிக் கணக்கில் வீழ்த்தி இத்தாலி வீரர் ஜன்னிக் சினெர் சம்பியன் பட்டம் வென்றார்.

## பாக். அணியிலிருந்து பாபர் அஸாம் நீக்கம்



இஸ்லாமாபாத், ஒக். 15

இங்கிலாந்துக்கு எதிரான 2ஆவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியிலிருந்து பாகிஸ்தான் அணியின் முன்னாள் தலைவர் பாபர் அஸாம் நீக்கப்பட்டுள்ளார். இங்கிலாந்து அணி பாகிஸ்தானில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு விளையாடி வருகிறது. முதல் டெஸ்டில் பாகிஸ்தானை, இன்னிங்ஸ் வித்தியாசத்தில் இங்கிலாந்து வீழ்த்தியது.

இந்த வெற்றியின் மூலம் 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் 1 - 0 என இங்கிலாந்து முன்னிலையில் உள்ளது. இவ்விரு அணிகள் இடையிலான 2ஆவது டெஸ்ட் போட்டி இன்று 15ஆம் திகதி ஆரம்பிக்கிறது. இந்த நிலையில் 2ஆவது டெஸ்ட் போட்டிக்கான பாகிஸ்தான் அணியில் இருந்து பாபர் அஸாம் நீக்கப்பட்டுள்ளார்.

மேலும், ஷஹீன் அப்ரிடி, நசீம் ஷா ஆகியோரும் அணியிலிருந்து நீக்கப்பட்டுள்ளனர். (எ)

# ஆஸி அபார பந்துவீச்சு இந்திய அணி தோல்வி

சார்ஜா, ஒக். 15

இந்தியா - அவுஸ்திரேலிய அணிகளுக்கு இடையிலான ரி - 20 போட்டியில் ஆஸி அணி 9 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

9ஆவது மகளிர் ரி - 20 உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டி ஐக்கிய அரபு அமீரகத்தில் உள்ள டுபாய் மற்றும் சார்ஜாவில் நடைபெற்று வருகிறது. இதில் பங்கேற்றுள்ள 10 அணிகள் இரு பிரிவுகளாக பிரிக்கப்பட்டு தங்களுக்குள் மோதி வருகின்றன. லீக் சுற்று முடிவில் இரண்டு பிரிவிலும் முதல் இரு இடங்களைப் பிடிக்கும் அணிகள் அரை இறுதிக்கு தகுதி பெறும். இந்த நிலையில் சார்ஜாவில் நேற்று முன்தினம் நடைபெற்ற போட்டியில் அவுஸ்திரேலியா அணி முதலில் துடுப்பெடுத்தாடியது.

அந்த அணி சார்பில் கிரேஸ் ஹாரிஸ், தஹிலா மெக்ராத் இருவரும் சிறப்பாக விளையாடினர். கிரேஸ் ஹாரிஸ் 40 ஓட்டங்களும், தஹிலா மெக்ராத் 32 ஓட்டங்களும் எடுத்து ஆட்டமிழந்தனர். தொடர்ந்து களமிறங்கிய எல்லிஸ் பெரி 32 ஓட்டங்கள் எடுத்தார். இறுதியில் அவுஸ்திரேலிய அணி 20 ஓவர்கள் முடிவில் 8 விக்கெட்கள் இழப்புக்கு 151 ஓட்டங்கள் எடுத்தது.

தொடர்ந்து 152 ஓட்டங்கள் இலக்குடன் இந்தியா விளையாடியது. அவுஸ்திரேலிய அணியின் அபார பந்துவீச்சால் இந்திய அணி சீரான இடைவெளியில் விக்கெட்களை பறிகொடுத்து வந்தது. அணித் தலைவி ஹர்மன் பிரீத் கவுர் நிலைத்து நின்றி விளையாடி அரைச்சதமடித்



தார். வெற்றிக்கு அருகில் கொண்டுவந்தும், அவரால் அணியை வெற்றிபெறச்செய்ய முடியவில்லை.

முடிவில் இந்திய அணி 20 ஓவர்களில் 9 விக்கெட்கள் இழப்புக்கு 142 ஓட்டங்கள் எடுத்தது. இதன் மூலம் 9 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அவுஸ்திரேலிய அணி வெற்றி பெற்றது. இந்த வெற்றியின் மூலம் அவுஸ்திரேலிய அணி அரையிறுதி சுற்றுக்கு முன்னேறியது. (எ)

## 10 விக்கெட் வித்தியாசத்தில் இங்கிலாந்து மகளிர் வெற்றி

சார்ஜா, ஒக். 15

ஸ்கொட்லாந்துக்கு எதிரான ரி - 20 போட்டியில் இங்கிலாந்து அணி விக்கெட் இழப்பின்றி 113 ஓட்டங்கள் எடுத்து அபார வெற்றி பெற்றது.

9ஆவது மகளிர் ரி - 20 உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டி நடைபெற்று வருகிறது. இதில் இங்கிலாந்து - ஸ்கொட்லாந்து அணிகள் மோதின. முதலில் துடுப்பெடுத்தாடிய ஸ்கொட்லாந்து அணி தொடக்கம் முதல் இங்கிலாந்து அணியின் பந்துவீச்சை சமாளிக்க முடியாமல் தடுமாறியது. இதனால் அந்த அணி 20 ஓவர்கள் முடிவில் 6 விக்கெட்கள் இழப்புக்கு 109 ஓட்டங்கள் எடுத்தது. ஸ்கொட்லாந்து அணியில் கேத்ரின் பிரைஸ் 33 ஓட்டங்களும், சாரா பிரைஸ் 27 ஓட்டங்களும் எடுத்தனர். இங்கிலாந்து அணியில் சோபி எக்லெஸ்டோன் 2 விக்கெட்கள் வீழ்த்தினார். இதனைத் தொடர்ந்து 110 ஓட்டங்கள் இலக்குடன் இங்கிலாந்து அணி விளையாடியது.

தொடக்க வீராங்கனைகளாக மயா பவுச்சியர், டேனில் வாட் ஆகியோர் களமிறங்கினர். தொடக்கம் முதல் இருவரும் அதிரடியாக விளையாடி அரைச்சதம் அடித்தனர். இதனால் இங்கிலாந்து அணி 10 ஓவர்களில் விக்கெட் இழப்பின்றி 113 ஓட்டங்கள் எடுத்து அபார வெற்றி



பெற்றது. மயா பவுச்சியர் 62 ஓட்டங்களும் டேனில் வாட் 51 ஓட்டங்களும் எடுத்து இறுதிவரை ஆட்டமிழக்காமல் இருந்தனர். இந்த வெற்றி மூலம் இங்கிலாந்து அணி புள்ளிப் பட்டியலில் முன்னேறியது. (எ)

## மூன்றாவது முறையாக சபலெங்கா சம்பியன்

பீஜிங், ஒக். 15

வூஹான் ஓபன் ரென்னிஸ் தொடரில் மூன்றாவது முறையாக சம்பியன் பட்டம் வென்று அசத்தினார் சபலெங்கா.

வூஹான் ஓபன் ரென்னிஸ் தொடர் சீனாவில் நடைபெற்று வந்தது. இந்தத் தொடரில் மகளிர் ஒற்றையர் பிரிவில் நேற்று நடைபெற்ற இறுதிப்போட்டியில் பெலாரஸ் வீராங்கனை அரினா சபலெங்கா, சீன வீராங்கனை குயின்வென் ஜெங்கை எதிர்கொண்டார். இதில் 6- 3, 5 - 7, 6 - 3 என்ற கணக்கில் குயின்வென் ஜெங்கை வீழ்த்தி சபலெங்கா தொடர்ந்து 3ஆவது முறையாக சம்பியன் பட்டம் வென்று அசத்தினார். (எ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வங்கக் கடல்...

அதன்படி, இது அடுத்த இரண்டு நாட்களில் குறைந்த காற்ற ழுத்த தாழ்வு பகுதியாக உருவாகி, மேற்கு - வடமேற்கு திசையில் வட தமிழகம், புதுச்சேரி மற்றும் அதை ஒட்டிய தெற்கு ஆந்திரா கடற்கரையை நோக்கி நகரும் என அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

06 மற்றும் 12 வடக்கு அட்சரேகைகள் மற்றும் 81 மற்றும் 93 கிழக்கு தீர்க்க ரேகைகளுக்கு இடைப்பட்ட கடல் பகுதிகளில், ஒரு கிலோ மீற்றருக்கு மிகப் பலமான காற்று வீசுவதுடன் கனமழை பெய்யும் சாத்தியம் உண்டு. அத்துடன் கடல் சீற்றத்துடன் இருக்கும் என அதில் கூறப்பட்டுள்ளது. (அ)

## புலமைப்பரிசில்...

நடத்தப்படுமா இல்லையா என்பதை தீர்மானிப்பதற்காக 07 பேர் கொண்ட குழுவொன்றை நியமிப்பதற்கு கல்வி அமைச்சு அண்மையில் நடவடிக்கை எடுத்திருந்தது.

இந்த வருட புலமைப்பரிசில் பரீட்சையில் சில வினாக்கள் கசிந்தமையினால் பிரச்னையான சூழ்நிலை உருவானதுடன், பரீட்சைகள் திணைக்களம் மற்றும் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகளை ஆரம்பித்தனர்.

மேலும் புலமைப்பரிசில் பரீட்சையில் சில கேள்விகளை பரீட்சைக்கு முன்னர் கசியவிட்டதாக குற்றம் சுமத்தப்பட்ட மஹரகம தேசிய கல்வி நிறுவகத்தின் பணிப்பாளர் மற்றும் பாடசாலை ஆசிரியர் ஒருவரையும் எதிர்வரும் 22ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு கடுவலை நீதவான் நீதிமன்றம் அண்மையில் உத்தர விட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (அ)

## சீரற்ற...

கேகாலை, குருநாகல் மற்றும் புத்தளம் ஆகிய மாவட்டங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. இதன் காரணமாக 40 ஆயிரத்திற்கும் அதிகமான குடும்பங்களை சேர்ந்நத ஒரு இலட்சத்திற்கும் அதிகமானவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் மற்றும் முப்படையினர் ஆகியோரின் ஒத்துழைப்புடன் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்கும் நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றனர். ஜனாதிபதியின் ஆலோசனைக்கு அமைய இந்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இந்த நடவடிக்கை சீரற்ற கால நிலை குறைவடையும் வரை தொடர்ந்து முன்னெடுக்கப்படும்-என்றார்.

அனர்த்த நிலை தொடர்பில் கருத்து தெரிவித்த பாதுகாப்பு அமைச்சின் மேலதிக செயலாளர் கே.ஜீ.தர்மதிலக ,

சீரற்ற கால நிலையின் காரணமாக 16 மாவட்டங்களை சேர்ந்த 89 பிரதேச செயலாளர் பிரிவுகளை சேர்ந்த 40 ஆயிரத்து 516 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

79 இடைத்தங்கல் முகாம்களில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளனர். இந்த சீரற்ற கால நிலையின் காரணமாக 3 உயிரிழந்துள்ளனர். அதேபோன்று இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

வீடொன்று முழுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. 405 வீடுகள் பகுதி அளவில் சேதமடைந்துள்ளன. கொழும்பு, கம்பஹா , களுத்துறை மற்றும் புத்தளம் ஆகிய மாவட்டங்களை சேர்ந்நதவர்களே'அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இடைத்தங்கல் முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ள 10 ஆயிரத்திற்கும் அதிக குடும்பங்களுக்கு தேவையான உணவு மற்றும் சுகாதாரப்பாதுகாப்பை உறுதிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ள நான்கு மாவட்டங்களின் அரசாங்க அதிபர்களுக்கு 33 மில்லியன் ருபாய் பணம் நிவாரண நடவடிக்கைகளுக்காக வழங்கப்பட்டுள்ளது - என்றார். (அ)

## அர்ஜுன்...

செய்துள்ளது.

உரிய வரிகளை செலுத்துமாறு கடந்த வருடம் நவம்பர் மாதம் 14ஆம் திகதி பிரதிவாதிகளுக்கு நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்திருந்தது.

இந்த வழக்கு நேற்று கொழும்பு மேலதிக நீதவான் பண்டார இலங்கசிங்க முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

அதன்போது, உரிய வரித் தொகை செலுத்தப்படாத காரணத்தினால், பிரதிவாதிகளுக்கு நீதிமன்றம் இந்தத் தண்டனையை விதித்துள்ளது. (அ)

## வெள்ளக்...

நிதியை ஒதுக்க ஏற்பாடு செய்யுமா றும் அவர் தெரிவித்தார்.

இவ்வருடம் இரண்டு தடவைகள் வெள்ள அனர்த்தம் ஏற்பட்டதாகவும், அதற்கமைவாக அடிக்கடி ஏற்படும் வெள்ளத்தை கட்டுப்படுத்துவதற்கு சரியான மற்றும் நிலையான வேலைத்திட்டம் அவசியம் எனவும் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தெரிவித்தார்.

அனர்த்த முகாமைத்துவ அமைச்சு மற்றும் நிதி அமைச்சின் அதிகாரிகளுடன் நேற்று ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சீரற்ற காலநிலையினால் பாதிக்கப்பட்டுள்ள கொழும்பு, கம்பஹா, புத்தளம் மற்றும் களுத்துறை மக்களுக்கு உடனடி நிவாரணம் வழங்குப் பணியை முதன்மைப்படுத்துமாறும், அதன் பின்னர், சேதமடைந்த சொத்துக்களை புனரமைக்க நடவடிக்கை எடுக்குமாறும் அமைச்சின் அதிகாரிகளுக்கு ஜனாதிபதி பணிப்புரை வழங்கினார்.

அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காக ஏற்கனவே கூடுதலாக ஒதுக்கப்பட்டுள்ள 50 மில்லியன் ரூபாவுக்கு மேலதிகமாக மேலும் பணம் தேவைப்படுமாயின் அதற்கான நிதி ஒதுக்கீட்டை மேற்கொள்ளுமாறும் ஜனாதிபதி நிதி அமைச்சின் செயலாளருக்கு அறிவித்தார். (அ)

## ஐ.நா.அபிவிருத்தி...

கொள்வது மற்றும் இலங்கை மக்கள் மீதான அவற்றின் தாக்கம்" என்ற தலைப்பில் தயாரிக்கப்பட்ட அறிக்கையும் ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தித் திட்டத்தின் பிரதி நிதியினால் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க விடம் கையளிக்கப்பட்டது.

இந்த அறிக்கையின் அடிப்படையில் இலங் கையின் அபிவிருத்தி முயற்சிகளுக்கு ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி வேலைத்திட்டம் பூரண ஆதரவை வழங்கும் எனவும் பிரதிநிதி உறுதியளித்தார்.

நாட்டின் பொருளாதாரத்தில் பெண்களின் பங்களிப்பு குறைவாக காணப்படுகின்றமை குறித்தும் இந்த சந்திப்பில் விசேடமாக கவனம் செலுத்தப்பட்டது..

நுண்கடன் துறையில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகள் தொடர்பிலும் இதன் போது கவனம் செலுத்தப்பட்டதுடன், அத்துறையின் வட்டி விகிதங்கள் நியாயமாக இல்லை எனவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டியுள்ளார்.

புதிய அரசாங்க சீர்திருத்தங்கள், ஊழலுக்கு எதிரான முயற்சிகள் மற்றும் பொருளாதாரம் மற்றும் பாராளுமன்றம் இரண்டிலும் பெண்களின் பங்களிப்பை அதிகரிப்பதற்கு ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தித் திட்டத்தின் உறுதிப்பாடு இந்த சந்திப்பின் போது மீண்டும் உறுதிப்படுத்தப்பட்டது.

இக்கலந்துரையாடலில் ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தித் திட்டத்தின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி அசுசா குபோடா, மூலோபாய ஈடுபாடு, டிஜிற்றல் மற்றும் புத்தாக்கக் குழுவின் தலைவர் பாதில் பாக்கீர் மாக்கார் ஆகியோரும் கலந்துகொண்டனர். (அ)

# தேசிய மக்கள் சக்தி எம்.பிக்களின் சம்பளம் கட்சியின் நிதியத்துக்கே!

## சுனில் ஹந்துன்நெத்தி விளக்கம்

கொழும்பு, ஒக். 15

புதிய பாராளுமன்றத்துக்குத் தெரிவாகும் தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினர்கள் எவரும் சம்பளத்தை பெற்றுக் கொள்ளப் போவதில்லை. குறித்த உறுப்பினர்கள் தமது சம்பளத்தை கட்சியின் நிதியத்துக்கே வழங்கவுள்ளதாக கட்சியின் தேசிய செயற்குழு உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி தெரிவித்தார்.

கொழும்பில் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்தாவது-

எமது கட்சி சலுகைகளுக்காக அரசியல் செய்யும் இயக்கம் அல்ல. ஆளுங் கட்சியில் இருந்தாலும் சரி, எதிர்க்கட்சியில் இருந்தாலும் சரி இந்த கொள்கையில் மாற்றம் ஏற்படாது.

தேசிய மக்கள் சக்தியின் அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களும் கட்சியின் நிதியத்துக்கே தமது சம்பளத்தை வழங்குவர். நிதியத்தின் ஊடாகவே அவர்களுக்கு சம்பளம் வழங்கப்படும்-என்றார்.

தேசிய மக்கள் சக்தியின் சார்பில் அல்லது கடந்த காலத்தில் மக்கள் விடுதலை முன்னணியின் சார்பில் நாடாளுமன்றத்துக்குத் தெரிவாகியிருந்த எம்.பிகள், தமது சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளை நேரடியாக கட்சியின் நிதியத்துக்கே வழங்கியிருந்தனர். கட்சியின் நிதியத்தின் ஊடாகவே இவர்களுக்கு சம்பளம் வழங்கப்படும் என்பதும் சுட்டிக்காட்டத்தக்கது. (அ)

## இலஞ்சம்...

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அரசாங்கம் ஏற்கனவே சில விடயங்கள் குறித்த விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

நெறிமுறையான நிர்வாகம்,ஊழலை ஒழித்தல் அரச சேவையில் வினைத்திறன் சட்டத்தின் ஆட்சி பொறுப்புக்கூறல் மற்றும் நேர்மை ஆகியவற்றை உள்ளடக்கிய புதிய கலாசாரத்தை வளர்ப்பதற்கு ஜனாதிபதி அதிக முக்கியத்துவத்தை அளித்துள்ளார்.பொருளாதார வெற்றியுடன் இந்த முக்கியமான தூண்கள் இணைந்திருக்கவேண்டும் என நாங்கள் கருதுகின்றோம். நாங்கள் வழங்கியுள்ள உறுதிமொழிகளுக்கு ஏற்ப இலஞ்சம் ஊழலை சிறிதளவும் சகித்துக்கொள்ள மாட்டோம் - என்றார். (அ)

## இலங்கை...

முன்னாள் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் மார்க்கண்டு நடராசா என்பவரால் கடந்த 10 ஆம் திகதி இந்த வழக்கு தொடரப்பட்டுள்ளது.

இதன்போது, வழக்கை தொடர்ந்துள்ள மார்க்கண்டு நடராசா முன்வைத்துள்ள கோரிக்கைகளாவன-

1 முதல் 3 வரையான எதிராளிகள் 27.01.2024இற்குப் பின்னராக இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மத்திய செயற்குழுவை கூட்டியமையும் அதில் எடுக்கப்பட்ட தீர்மானங்களும் இலங்கை தமிழரசுக் கட்சியின் யாப்புக்கு முரணானவை என்ற வகையில் வெற்றும் வெறிதானவையும் என்ற கட்டளைக்கும் தீர்ப்புக்கும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

மேலும், 1ஆம் மற்றும் 2ஆம் எதிராளிகள் இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவர் மற்றும் செயலாளர் என்ற அடிப்படையில் இலங்கை தமிழரசுக் கட்சியின் மத்திய செயற்குழ என்ற பெயரில் எவ்வித கூட்டங்களினையும் கூட்டக்கூடாது என்ற இடைக்காலத் தடை விதிக்குமாறும் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

அத்துடன், 1ஆம் எதிராளி இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவர் என்ற கோதாவில் செயற்படக்கூடாது என்று இடைக்காலத் தடை உத்தரவு பிறப்பிக்குமாறும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, 2ஆம் எதிராக இலங்கை தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளர் என்ற கோதாவில் செயற்படக் கூடாது என்று இடைக்காலத் தடை உத்தரவினை பிறப்பிக்குமாறும் வழக்காளியின் சார்பில் வேண்டுதல் முன்வைக்கப்பட்டுள்ளது.

வழக்காளி சார்பில் சட்டத்தரணி த.டினேஷ் மன்றில் ஆஜரானார்.

இந்த வழக்கின் அடுத்த தவணை நவம்பர் 18 ஆம் திகதிக்கு திகதியிடப்பட்டுள்ளது. (அ)

## 10 இலட்சம் ரூபா பெறுமதியான கேரள கஞ்சாவுடன் ஒருவர் கைது

கொழும்பு, ஒக். 15

வெல்லம்பிட்டி, மீத்தொட்டமுல்ல பிரதேசத்தில் 10 இலட்சம் ரூபாவுக்கும் அதிக பெறுமதியான கேரள கஞ்சாவுடன் சந்தேக நபரொருவர் பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போதே சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மீத்தொட்டமுல்ல பிரதேசத்தில் வசிக்கும் 36 வயதுடைய நபரே கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபரிடமிருந்து 04 கிலோ 112 கிராம் நிறையுடைய கேரள கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளது.

இதனையடுத்து, கைது செய்யப்பட்ட சந்தேக நபர் மேலதிக விசாரணைகளுக்காக வெல்லம்பிட்டி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார். (அ)

## ஈஸ்டர்...

கட்டுவாப்பிட்டிய தேவாலயத்திற்கு அண்மையில் சென்றிருந்தார். அவர் வெறுங்கையுடன்தான் அங்கு சென்றிருந்தார்.

எனினும், ஈஸ்டர் தாக்குதல் தொடர்பாக இதுவரை வெளிவராத அறிக்கைகள் இரண்டை அவர், அங்கு கொண்டு சென்றிருக்கலாம் என்று தெரிவித்திருந்தேன். இனியும் தாமதிக்காமல், அந்த இரண்டு அறிக்கைகளையும் ஜனாதிபதி வெளியிட வேண்டும் என்று நாம் அரசாங்கத்திடம் வலியுறுத்தியிருந்தோம்.

எனினும், அமைச்சரவைப் பேச்சாளரான விஜத ஹேரத், சில அறிக்கைகளின் பக்கங்கள் குறைவாக காணப்படுவதாகவும் சில அறிக்கைகள் காணாமல் ஆக்கப்பட்டுள்ளதாகவும் கூறினார்.

மேலும், இது தொடர்பாக தாங்கள் விசாரணை நடத்துவதாகவும் அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்திருந்தார். அமைச்சரே, ஈஸ்டர் தாக்குதல் தொடர்பான எந்தவொரு அறிக்கையின் பங்கங்கள் குறைவடையவும் இல்லை, எந்தவொரு அறிக்கையும் காணாமல் போகவும் இல்லை என்பதை நாம் பொறுப்புடன் கூறிக்கொள்கிறோம்.

அரசாங்கத்திற்கும், சட்டமா அதிபர் திணைக்களத்திற்கும், ஜனாதிபதியின் செயலகத்திற்கும் இந்த அறிக்கைகளை தேடிக் கண்டுபிடிக்க முடியாமல் போனாலும், எம்மிடம் தற்போது அந்த இரண்டு அறிக்கைகளும் கிடைத்துள்ளன.

எனவே, ஜனாதிபதி இன்னும் 7 நாட்களில் இதுவரை வெளியிடப்படாத, ஈஸ்டர் தாக்குதல் தொடர்பான இந்த இரண்டு விசாரணை அறிக்கைகளையும் வெளியிட வேண்டும்.

அவ்வாறு இல்லாவிட்டால், நாம் அந்த இரண்டு அறிக்கைகளையும் வெளியிடுவோம்-என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# 50 மதுபானசாலை உரிமங்கள் மீள் பரிசீலனை செய்யப்படும்!

## அநுர அரசு நடவடிக்கை

கொழும்பு, ஒக். 15

**ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் வழங்கப்பட்ட ஐம்பது மது பானசாலை உரிமங்கள் நிறுத்திவைக்கப்பட்டுள்ளதுடன் அவை மீண்டும் வழங்கப்படுவதற்கு அல்லது இரத்து செய்யப்படுவதற்கு முன்னர் மீள்பரிசீலனைக்கு உட்படுத்தப்படும் என உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.**

தேர்தலை முன்னிட்டு அரசியல் தொடர்புகள் மூலம் பல்வேறு நபர்களுக்கு ஐம்பது மதுபானச்சாலை உரிமங்கள் வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

மதுபானச்சாலை உரிமங்களைப் பெற்ற பலர் அவற்றை இரத்து செய்ய வேண்டாம் என கோரிக்கை விடுத்துள்ளதாக கூறிய அவர், இறுதித் தீர்மானம் எடுப்பதற்கு முன்னர் அரசாங்கம் மீள்பரிசீலனை செய்யும் எனவும் தெரிவித்தார்.

மதுபானச்சாலை உரிமம் பெற விரும்புவோருக்கு புதிய வழிகாட்டுதல்கள் வெளியிடப்படும் என்றும் மதுபானச்சாலைகளை திறப்பதற்கு பொதுமக்கள் எதிர்ப்பு தெரிவிக்கும் பட்சத்தில்,அது குறித்து பரிசீலிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புதிய மதுபானச்சாலை உரிமங்கள் வழங்கப்படுவதற்கு முன்னர் குடியிருப்பாளர்கள் மற்றும் மத வழிபாட்டுத் தலங்கள் மற்றும் பாடசாலைகளின் கருத்துக்களும் கவனத்திற் கொள்ளப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# கட்சிகளின் செயலர்களை இன்று சந்திக்கும் தேர்தல் ஆணைக்குழு!

கொழும்பு, ஒக். 15

எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தல் தொடர்பில் அரசியல் கட்சி செயலாளர்களுக்கும் தேர்தல்கள் ஆணைக் குழுவுக்கும் இடையிலான கலந்துரையாடல் இன்று செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளது.

இந்த கலந்துரையாடல் இன்று காலை 9.30 மணிக்கு கொழும்பு, ராஜகிரியவில் அமைந்துள்ள தேர்தல்கள் ஆணையகத்தில் நடைபெறவுள்ளது.

பாராளுமன்ற தேர்தல் அறிவிப்புக்கு பின்னர் அரசியல் கட்சி செயலாளர்கள் தேர்தல்கள் ஆணைக்குழு அதிகாரிகளை சந்திப்பது இதுவே முதல் முறை.

இதன்போது, தேர்தல் காலத்தில் ஒரு வேட்பாளருக்கு செலவிடப்படும் குறைந்தபட்ச தொகையும் இன்று தீர்மானிக்கப்பட உள்ளது.

அதையடுத்து இது தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்படும் என்று தேர்தல்கள் ஆணைக் குழு கூறியுள்ளது. (அ)

# தையிட்டியில் புதிதாக திறக்கப்படவுள்ள மதுபானசாலைக்கு எதிராக போராட்டம்!

யாழ்ப்பாணம், ஒக். 15

யாழ்ப்பாணம் - தையிட்டிப் பகுதியில் திறக்கப்படவுள்ள மதுபானசாலைக்கு எதிர்ப்பு தெரிவித்து இன்று ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

இன்று காலை தெல்லிப்பழை பிரதேச செயலகத்திற்கு முன்பாக வலி வடக்கு சிவில் சமூக அமையத்தின் ஏற்பாட்டில் குறித்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

ஆர்ப்பாட்டத்தின் பின்னர் தெல்லிப்பளை பிரதேச செயலாளர் சிவகெங்கா சுதீஸ்னரிடம் மகஜர் ஒன்றும் வழங்கப்பட்டது.




ஆர்ப்பாட்டத்தில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் பொன்னம்பலம், சட்டத்தரணி நடராஜர் காண்டீபன், சிவில் சமூக அமைப்புக்களின் பிரதிநிதிகள், பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (அ)

# கம்பஹா, கொழும்பு, புத்தளத்துக்கு நிவாரண குழுக்கள் அனுப்பிவைப்பு

கொழும்பு, ஒக். 15

கம்பஹா, கொழும்பு மற்றும் புத்தளம் மாவட்டங்கணளில் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவுவதற்காக, அனர்த்த முகாமைத்துவ நிலையத்துடன் ஒருங்கிணைந்து பணியாற்றுவதற்காக இலங்கைக் கடற்படையின் எட்டு வெள்ள நிவாரணக் குழுக்கள் அனுப்பப்பட்டுள்ளன.



இந்த நிவாரணக் குழுவினர் வெள்ள நிவாரணப் பணிகளை மேற்கொண்டுள்ளனர்.

கடும் மழை காரணமாக களு கங்கை, களனி கங்கை, அத்தனகல்லு ஓயா மற்றும் தெதுரு ஓயா ஆகிய ஆறுகள் நிரம்பி வழிவதால் கம்பஹா, கொழும்பு மற்றும் புத்தளம் மாவட்டங்களில் பல பகுதிகளில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளது.

இந்தப் பின்னணியில் கடுவெல, மாபிம, நவகமுவ, இஹலகம, ஜா-எல மற்றும் நாத்தாண்டிய ஆகிய இடங்களில் கடற்படை வெள்ள நிவாரணக் குழுக்கள் ஈடுபடுத்தப்பட்டு, பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவிகளை வழங்கும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட நபர்களுக்கு உதவுவதற்காக படகுகள் மூலம் பாதுகாப்பான போக்குவரத்தை வழங்குதல், 4,876 பேருக்கு சமைத்த உணவு மற்றும் உலர் உணவுகளை விநியோகித்தல், நீரில் மூழ்கும் அபாயத்தில் உள்ள மூவரை மீட்டு மக்களை பாதுகாப்பான இடங்களுக்கு வழிநடத்துதல் உள்ளிட்ட பணிகளை நிவாரணக் குழுக்கள் தீவிரமாக மேற்கொண்டு வருகின்றன.

# மரக்கடத்தலில் ஈடுபட்டவர்கள் மீது ஓமந்தை பொலிஸ் துப்பாக்கிச்சூடு!

வவுனியா, ஒக். 15

வவுனியா, ஓமந்தைப் பகுதியில் மரக்கடத்தலில் ஈடுபட்டவர்கள் பொலிஸாரை மோதித் தள்ளி தப்பிச் செல்ல முற்பட்டபோது பொலிஸார் துப்பாக்கிச்சூடு நடத்தி, இருவரைக் கைது செய்துள்ளனர் என்று ஓமந்தைப் பொலிஸார் தொவித்தனர்.

நேற்று முன் தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

வவுனியா, ஓமந்தைப் பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்துப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஜெயதிலக தலைமையில் பொலிஸார் மேற்கொண்ட விசேட சோதனை நடவடிக்கையில் ஓமந்தையில் இருந்து மறவன் குளம் நோக்கிக் கடத்தப்பட்ட மரக்குற்றிகளுடனான வாகனம் பொலிஸாரால் வழிமறிக்கப்பட்டது.



இதன்போது, பொலிஸாரை மோதி விட்டு மரக்குற்றிகளுடன் வாகனம் தப்பிச் செல்ல முற்பட்ட போது பொலிஸார் துப்பாக்கிச் சூடு நடத்தினர்.

இதனையடுத்து வாகனமும் அதில் இருந்த மரக் குற்றிகளும் மீட் கப்பட்டதுடன் இருவர் கைது செய்யப்பட்டனர்.

அவர்களை இருவரையும் மேலதிக விசாரணைகளின் பின் நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று ஓமந்தைப் பொலிஸார் மேலும் குறிப்பிட்டனர். (அ)

# அதானி காற்றாலை மின் திட்டத்தை மீள்பரிசீலனை செய்வதற்கு தயார்!

## நீதிமன்றத்துக்கு அரசாங்கம் தகவல்

கொழும்பு, ஒக். 15

இந்தியாவின் அதானி குழுமம் மன்னார் விடத்தல் தீவில் காற்றாலை மின் நிலையம் நிர்மாணிக்கும் திட்டத்தை மீள்பரிசீலனை செய்ய அமைச்சரவை தீர்மானித்துள்ளதாக சட்டமா அதிபர் உயர் நீதிமன்றில் தெரிவித்துள்ளார்.

விடத்தல்தீவில் அதானி குழுமம் காற்றாலை மின் திட்டத்தை அமைப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியமைக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மீறல் மனுவை உயர்நீதிமன்றம் நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொண்டது.

இதன்போதே சட்டமா அதிபர் திணைக்களம் இந்த மாதம் 7 ஆம் திகதி உத்தேச காற்றாலை மின் திட்டத்தை மீள்பரிசீலனை செய்ய அமைச்சரவை தீர்மானித்துள்ளதாக நீதிமன்றில் தெரிவித்தது.

இந்த விடயங்களில் இணக்கம் தெரிவித்த மனுதாரரின் சட்டத்தரணிகள், அந்தந்த மனுக்களில் பிரதிவாதிகளில் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளதால் உத்தேச அமைச்சரவை உறுப்பினர்களை பிரதிவாதிகளாக நியமித்து மனுவில் திருத்தம் செய்ய அனுமதிக்குமாறு நீதிமன்றத்திடம் கோரிக்கை விடுத்தனர்.

இந்த கோரிக்கையை ஏற்றுக்கொண்ட நீதிமன்றம், இந்த விடயங்கள் தொடர்பில் அரசாங்க அவதானிப்புகள் இருப்பின் அவற்றை எதிர்வரும் ஜனவரி 31ஆம் திகதிக்கு முன்னர் தாக்கல் செய்யுமாறும் உத்தரவிட்டுள்ளது.

சுற்றுச்சூழல் நீதி மையம் உள்ளிட்ட 5 தரப்பினர் இந்த மனுக்களை சமர்ப்பித்து, உத்தேச காற்றாலை மின் நிலையம் நிர்மாணிப்பதால், சுற்றுச்சூழல் பல்லுயிர் பெருக்கத்துக்கு கடுமையான பாதிப்பை ஏற்படுத்தும் என்றும், இந்த மின் நிலையத்தால் புலம்பெயர்ந்த பறவைகளின் உயிருக்கு கடுமையான ஆபத்து ஏற்படும் என்றும் அவர்களது மனுவில் தெரிவித்திருந்தனர்.

இது தொடர்பான மனுக்கள் நேற்று எஸ். துரைராஜா, ஏ.எச்.எம்.டி. நவாஸ், ஷிரான் குணரத்ன, அச்சல வெங்கப்புலி மற்றும் மஹிந்த சமயவர்தன ஆகிய ஐவரடங்கிய உயர் நீதிமன்ற நீதியரசர்கள் குழு முன்னிலையில் விசாரணைக்கு எடுக்கப்பட்டன. (அ)

# ரூபாவின் பெறுமதி வீழ்ச்சி!

கொழும்பு, ஒக். 15

கடந்த வாரத்துடன் ஒப்பிடுகையில், அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி நேற்று சிறிதளவு வீழ்ச்சியடைந்துள்ளதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

அதன்படி, அமெரிக்க டொலர் ஒன்றின் கொள்வனவு மற்றும் விற்பனை பெறுமதி நேற்று முறையே 288.50 ரூபாவாகவும், 297.49 ரூபாவாகவும் உள்ளது.

கடந்த வாரம் அமெரிக்க டெலர் ஒன்றின் கொள்வனவு மற்றும் விற்பனை பெறுமதியானது 288.46 ரூபாவாகவும், 297.46 ரூபாவாகவும் காணப்பட்டிருந்தது.

இதேவேளை, மத்திய கிழக்கு உட்பட ஏனைய பிரதான நாட்டு நாணயங்களுக்கு நிகராகவும் ரூபாவின் பெறுமதி நேற்று வீழ்ச்சி கண்டது. (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 15.10.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org